


# தினபூமி

thinaboomi.com








**அதானி மீதான லஞ்ச புகாரால் இந்திய, அமெரிக்க உறவில் விரிசல் ஏற்படாது: வெள்ளை மாளிகை**

...2-ம் பக்கம்

**மணிப்பூர் ஐகோர்ட்டின் 8-வது தலைமை நீதிபதியாக கிருஷ்ணகுமார் பதவியேற்பு**

...3-ம் பக்கம்

**பெர்த் முதல் டெஸ்ட் போட்டி: முதல் இன்னிங்சில் ஆஸி.க்கு பதிலடி கொடுத்த இந்திய அணி**

...7-ம் பக்கம்





திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் நேற்று, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நேற்று நடைபெற்ற விழாவில், தமிழ்நாட்டின் வடபகுதியிலுள்ள நகரங்களுக்கும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினை கொண்டு செல்லும் நோக்கத்துடன் ரூ.330 கோடி செலவில் தரை மற்றும் 21 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள மாபெரும் டைடல் பூங்காவை, முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் உடனிருந்தனர்.

### மக்களை தேடி மருத்துவம்: 2 கோடியே ஒன்றாவது பயனாளிக்கு

# விழுப்புரத்தில் 29-ம் தேதி மருந்து பெட்டகம் வழங்குகிறார் முதல்வர்

## தமிழ்நாடு அரசு தகவல்

சென்னை, நவ. 23-

**மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் 2 கோடியே ஒன்றாவது பயனாளிக்கு வரும் 29-ம் தேதி விழுப்புரத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் மருந்து பெட்டகத்தினை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் வழங்குகிறார் என்று அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.**

**ஊட்டச்சத்து பொருட்கள்...**



ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறை சார்பில் ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து பொருட்களை தாய்மார்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி சைதாப்பேட்டையில் நேற்று நடந்தது. அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். பின்னர் அவர் கூறியதாவது:-

இந்த திட்டத்தில் 65 ஆயிரத்து 503 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். முதல்வர் மு.க.ஸ்டாலினின் எண்ணத்தில் உருவான மக்களை தேடி மருத்துவம் திட்டம் மிகச் சிறப்பாக நிறைவேறி வருகிறது. 2 கோடி பயனாளிகளை நெருங்கி கொண்டிருக்கிறது.

**அரசு நலத்திட்டங்கள்...**

வருகிற 29-ம் தேதி முதல்வர் மு.க. ஸ்டாலின் விழுப்புரத்தில் அரசு நலத்திட்டங்களை தொடங்கி வைக்க செல்கிறார். அப்போது மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் 2 கோடியே ஒன்றாவது பயனாளியை திருப்பசாவடி மேடு, கோவிந்தபுரம், ஏணதி மங்கலம் ஆகிய 3 கிராமங்களில் இருந்து தேர்வு செய்யப்படுவார். அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இலவச மருந்து பெட்டகத்தை வழங்குவார். இவ்வாறு அவர்கூறினார்.

# வங்கக்கடலில் இன்று புதிய புயல் சின்னம் உருவாகிறது

## தமிழகத்தில் 29-ம் தேதி வரை மழைக்கு வாய்ப்பு

சென்னை, நவ. 23-

**வங்கக் கடலில் இன்று புதிய புயல் சின்னம் உருவாகிறது என்று வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. மேலும் இது இரு தினங்களில் வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்றும் தமிழகத்தில் 29-ம் தேதி வரை மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.**




சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நேற்று (22-11-2024) ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, இன்று (23-ம் தேதி) வாக்கில் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, அதற்கடுத்த இரு தினங்களில் தெற்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும்.

தெற்கு அந்தமான் கடல் பகுதிகளிலிருந்து மன்னார் வளைகுடா வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தெற்கு கேரளா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. வரும் 24-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

*25-11-2024:* கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

*26-11-2024:* தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், ராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

*27-11-2024:* தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சென்னை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

*28-11-2024:* தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, சென்னை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு: அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் அதிகாலை வேளையில் லேசான பனி மூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30-31 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 23-24 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழகம் முழுவதும் 2-ம் கட்டமாக

# இன்றும், நாளையும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாம்

சென்னை, நவ. 23-

**தமிழகம் முழுவதும் கடந்த வாரம் நடந்த சிறப்பு முகாமில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க மற்றும் நீக்கம், திருத்தம் செய்ய 6,85,513 பேர் விண்ணப்பம் செய்துள்ள நிலையில், 2-வது கட்டமாக இன்றும், நாளையும் சிறப்பு முகாம் நடைபெறுகிறது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, 01.01.2025-ஐ தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் 29.10.2024 முதல் 06.01.2025 வரை மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

சிறப்பு சுருக்கமுறைத் திருத்தத்தின், ஒரு பகுதியாக வாக்காளர்கள் தங்கள் பெயரை சேர்ப்பதற்கும், வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்கும் வசதியாக இந்திய தேர்தல் ஆணையத்தால், கடந்த 16-ம் தேதி, 17-ம் தேதி 23.11.2024 மற்றும் 24.11.2024 (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் வாக்குச்சாவடி அமைவிடங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழகம் முழுவதும் கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம், இடமாற்றம், ஆதார் எண் இணைப்பதற்காக நடைபெற்ற சிறப்பு முகாம் விண்ணப்பங்கள் பெறப்பட்டது.

தமிழக மக்கள் ஆர்வத்துடன் சிறப்பு முகாமில் பங்கேற்றனர். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க கடந்த 2 நாள் சிறப்பு முகாமில் தமிழகம் முழுவதும் 4,42,035 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர். வாக்காளர் பட்டியலில் பெயரை நீக்க 44,128 பேரும், குடியிருப்பை ஒரு தொகுதியில் இருந்து வேறு தொகுதிக்கு மாற்ற அல்லது தற்போது வசிக்கும் தொகுதிகுள்ளேயே மாற்ற அல்லது நடப்பு வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளை திருத்தம் செய்ய 1,98,931 பேரும், வாக்காளர் பட்டியலுடன் ஆதார் எண்ணை சேர்க்க 419 பேர் என மொத்தம் 6,85,513 பேர் விண்ணப்பம் செய்திருந்தனர்.

இந்நிலையில், 2-வது கட்ட சிறப்பு முகாம் இன்றும், நாளையும் நடைபெறும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார். தமிழகம் முழுவதும், சுமார் 68 ஆயிரம் வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம் நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் செய்துள்ளனர்.

இந்த சிறப்பு முகாமில் 18 வயது நிறைவடைந்தவர்கள் மற்றும் 18 வயதுக்கு மேல் இதுவரை வாக்காளர் பட்டியலில் இடம் பெறாதவர்கள் தங்களது பெயரை சேர்த்துக் கொள்ள விண்ணப்பம் அளிக்கலாம். அதேபோன்று பெயர் நீக்கம், திருத்தம் செய்யவும் விண்ணப்பம் பெறப்படும்.

சிறப்பு முகாமில் விண்ணப்பம் செய்தவர்களின் வீடுகளுக்கு நேரடியாக வாக்குச்சாவடி அலுவலர்கள் சென்று, அவர்கள் கொடுத்த தகவல் உண்மையாக இருக்கிறதா என்பதை சோதனை செய்வார்கள். அதன்பிறகு அவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெறும்.

### சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்ற

# மகாராஷ்டிரா, ஜார்கண்டில் இன்று வாக்கு எண்ணிக்கை

## இரு மாநிலங்களில் ஆட்சியை பிடிக்கப்போவது யார்?

மும்பை, நவ. 23-

**மகாராஷ்டிரா மாநிலம் மற்றும் ஜார்கண்ட் சட்டசபை தேர்தல்களில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. இந்த இரு மாநிலங்களிலும் ஆட்சியை பிடிக்கப்போவது யார் என்பது இன்று மாலைக்குள் தெரியவரும். வாக்கு எண்ணிக்கைக்கான பணிகளை தேர்தல் ஆணையம் தயார் நிலையில் வைத்துள்ளது.**

மகாராஷ்டிரா மாநிலத்தில் மொத்தம் உள்ள 288 சட்டசபை தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக கடந்த 20-ம் தேதி தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் பா.ஜ.க., சிவசேனா( ஷிண்டே) மற்றும் தேசியவாத காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அடங்கிய ஆளும் 'மகாயுதி' கூட்டணிக்கும், காங்கிரஸ், சிவசேனா(உத்தவ்), தேசியவாத காங்கிரஸ்(எஸ்.பி.) ஆகிய எதிர்க்கட்சிகளின் 'மகாவிகாஸ் அகாடி' கூட்டணிக்கும் இடையே நேரடி போட்டி நிலவுகிறது.

இதே போல், ஜார்கண்ட் மாநிலத்தில் மொத்தம் உள்ள 81 சட்டசபை தொகுதிகளில், முதற்கட்டமாக 43 தொகுதிகளுக்கு கடந்த 13-ந்தேதி தேர்தல் நடைபெற்ற நிலையில், மீதம் உள்ள 38 தொகுதிகளுக்கு 2-ம் கட்டமாக கடந்த 20-ந்தேதி தேர்தல் நடைபெற்றது. அங்கு 'இந்தியா' கூட்டணிக்கும், பா.ஜ.க. கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

இரு மாநிலங்களிலும் நடந்த தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று (23-ம் தேதி) எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. வாக்கு எண்ணிக்கைக்கான பணிகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்க உள்ளது. முதலில் தபால் ஓட்டுகள் எண்ணப்பட்டு, பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான ஓட்டுகள் எண்ணப்பட உள்ளன. வாக்கு எண்ணிக்கை நிலவரம் மற்றும் புள்ளிவிவரங்கள் அனைத்தும் ஊடகங்கள் மூலம் தொடர்ச்சியாக அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# வரும் 2025-ம் ஆண்டுக்கான பொது விடுமுறை நாட்கள்

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, நவ. 23-

**2025-ம் ஆண்டுக்கான பொது விடுமுறை நாட்களை தமிழக அரசு அறிவித்துள்ளது.**

தமிழக அரசு ஊழியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் முக்கிய தினங்கள் மற்றும் மதரீதியான பண்டிகைகள் காரணமாக, அரசு பொது விடுமுறைகள் வழங்கப்படுவது வழக்கம். ஒவ்வொரு ஆண்டும் இந்த பொது விடுமுறை பட்டியல் முன்கூட்டியே வெளியிடப்படும். அதன்படி, 2025-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசு விடுமுறை பட்டியல் வெளியாகி உள்ளது. அந்த அறிவிப்பின்படி, அடுத்த ஆண்டு ஜனவரி 1 முதல் டிசம்பர் 25-ம் தேதி வரை மொத்தம் 23 நாட்கள் பொது விடுமுறை நாட்கள் ஆகும். 2025-ம் ஆண்டில் அனைத்து சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளும் பொது விடுமுறை நாட்களாகும்.

ஆங்கிலப் புத்தாண்டு, பொங்கல், திருவள்ளுவர் தினம், உழவர் தினம், தைப்பூசம், குடியரசு தினம், தெலுங்கு வருடப் பிறப்பு, மகாவீர் ஜெயந்தி, புனித வெள்ளி, தமிழ்ப் புத்தாண்டு, ரம்ஜான், மே தினம், பக்ரீத், மொகரம், சுதந்திர தினம், கிருஷ்ண ஜெயந்தி, விநாயகர் சதுர்த்தி, மிலாது நபி, காந்தி ஜெயந்தி, ஆயுத பூஜை, விஜய தசமி, தீபாவளி, கிறிஸ்துமஸ் ஆகிய தினங்கள் பொது விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அதிகபட்சமாக ஜனவரி மாதம் 5 நாட்கள் பொது விடுமுறையாகும். ஏப்ரல் மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களில் தலா 4 நாட்கள் பொது விடுமுறை வருகிறது. ஏப்ரல் 1-ந்தேதி (வங்கிகள் ஆண்டுக் கணக்கு முடிவு) வணிகம் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டும் பொது விடுமுறையாகும். குடியரசு தினம், தெலுங்கு வருடப்பிறப்பு, மொகரம் பண்டிகை ஆகிய பொது விடுமுறைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் வருவது குறிப்பிடத்தக்கது. இந்த அறிவிப்பு, தமிழகத்தில் உள்ள வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கேரளாவில் இடைத்தேர்தல் நடந்த

# 3 தொகுதிகளில் இன்று வாக்கு எண்ணிக்கை

திருவனந்தபுரம், நவ. 23-

**கேரளாவில் இடைத்தேர்தல் நடந்த வயநாடு பாராளுமன்ற தொகுதி மற்றும் செலக்கரா, பாலக்காடு சட்டமன்ற தொகுதிகளில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.**

கேரள மாநிலத்தில் உள்ள 20 மக்களவை தொகுதிகளுக்கான தேர்தல் கடந்த ஏப்ரல் மாதம் 26-ம் தேதி நடைபெற்றது. இதில் 18 தொகுதிகளில் காங்கிரஸ் கூட்டணி கட்சிகளும், பா.ஜ.க. மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிகள் தலா ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றன.

வயநாடு மக்களவை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி, ரேபரேலி தொகுதியிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவர் ரேபரேலி தொகுதி எம்.பி.யாகவே பதவியேற்றதால், வயநாடு தொகுதி எம்.பி. பதவியை ராஜினாமா செய்தார்.

அதே போன்று செலக்கரா தொகுதியின் எம்.எல்.ஏ. வாக இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் ராதா கிருஷ்ணன் ஆலத்தூர் மக்களவை தொகுதியிலும், பாலக்காடு தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஷாபி பரம்பில் வடகரா தொகுதியிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

அவர்கள் இருவரும் அந்த தொகுதிகளின் எம்.பி.க்களாக பதவியேற்றனர். இதன் காரணமாக வயநாடு மக்களவை தொகுதி, செலக்கரா மற்றும் பாலக்காடு சட்டமன்ற தொகுதிகள் காலியாகின.

வயநாடு மற்றும் செலக்கரா தொகுதிகளுக்கு கடந்த 13-ம் தேதி இடைத்தேர்தல் நடை பெற்றது. பாலக்காடு சட்ட மன்ற தொகுதிக்கு கடந்த 20-ம் தேதி இடைத்தேர்தல் நடத்தப்பட்டது.

இந்த நிலையில் வயநாடு மக்களவை தொகுதி, செலக்கரா மற்றும் பாலக்காடு சட்டமன்ற தொகுதிகளில் நடந்த இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள்

(கடைசி பக்கம் பார்க்க)

## மார்க்கெட் விலை நிலவரம்



BSE 1,961.32 பாயின்ட் 79,117.11

NSE 557.35 பாயின்ட் 23,907.25



**தங்கம்**
1 சவரன் ₹57,800
1 கிராம் ₹7,225



**வெள்ளி**
1 கிலோ ₹101,000
1 கிராம் ₹101.00

**டாலர்** ₹84.45

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### அதானி மீதான லஞ்ச புகாரால்

# இந்திய, அமெரிக்க உறவில் விரிசல் ஏற்படாது :வெள்ளை மாளிகை

**வாஷிங்டன், நவ. 23-**

அதானி மீதான லஞ்ச புகாரால் இந்திய – அமெரிக்க இடையேயான உறவில் விரிசல் ஏற்படாது என்று வெள்ளை மாளிகை திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.



வாஷிங்டனில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், வெள்ளை மாளிகையின் செய்தி தொடர்பாளர் கரீன் ஜீன்-பியரிடம் அதானி முறைகேடு குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதில் அளித்த அவர் கூறியதாவது, அதானி குழுமம் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து தங்களுக்கு தெரியும். அதானி குழுமத்திற்கு எதிரான அந்த குற்றச்சாட்டுகளின் அம்சங்கள் குறித்து பத்திரங்கள், பரிவர்த்தனை ஆணையம் மற்றும் நீதித்துறை அதிகாரிகள் தெரிவிப்பார்கள் என்று கூறினார்.

மேலும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான உறவு வலுவான அடித்தளம் கொண்டது என்றும் அதானி விவகாரத்தால் இந்திய – அமெரிக்க இடையேயான உறவில் விரிசல் ஏற்படாது என்றும் அவர் உறுதிப்பட தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், அதானி முறைகேடு விவகாரத்தில் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம் மற்றும் நீதித்துறை நேரடியாக கவனிக்கும் என்றும் விளக்கம் அளித்தார்.

முன்னதாக சூரிய சக்தி மின்சார ஒப்பந்தம் பெற லஞ்சம் கொடுக்க முன்வந்த புகாரில் அதானிக்கு பிடிவாரண்ட் பிறப்பித்து அமெரிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. அதனால் இரு நாட்டு உறவில் பாதிப்பு ஏற்படுமோ என்ற அச்சம் நிலவிய நிலையில், இந்தியா – அமெரிக்கா இடையே வலுவான உறவு இருப்பதாக வெள்ளை மாளிகை கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நிஜ்ஜார் கொலை குறித்த ஊடக செய்திக்கு கனடா அரசு மறுப்பு

**ஒட்டோவா, நவ. 23-**

காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை பற்றி பிரதமர் மோடி அறிந்திருந்தார் என்று கனடா நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், அந்த ஊடகச் செய்தியை கனடா அரசு மறுத்துள்ளது.

முன்னதாக, நிஜ்ஜாரை கொலை செய்ய இந்தியாவின் உள்துறை அமைச்சர் அமித்ஷா சதி திட்டம் தீட்டியதாக கூறி பெயர் வெளியிடாமல் பாதுகாப்பு அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கனடா ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

மேலும் அந்தச் செய்திகளில், நிஜ்ஜார் கொலை சதி பற்றி இந்திய பிரதமர் மோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலுக்குத் தெரியும். என்றாலும், இந்தக் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் ஆதாரம் எதுவும் கனடா அரசிடம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இது குறித்து கனடா அரசு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அக்டோபர் 14-ம் தேதியன்று, பொது பாதுகாப்புக்கு குறிப்பிடத்தக்க மற்றும் தொடர்ந்து அச்சுறுத்தல் ஏற்பட்டதால், ராயல் கனேடியன் மவுன்டன் போலீஸ் (ஆர்.சி.எம்.பி) மற்றும் அதன் அதிகாரிகள், கனடாவில் நிகழ்த்தப்பட்ட கடுமையான குற்றச் செயல்கள் குறித்து இந்திய அரசின் முகவர்களுக்கு தொடர்பு உண்டு என்ற பொது குற்றச்சாட்டினை முன்வைக்கும் அசாதாரண நடவடிக்கை எடுத்தது.

பிரதமர் மோடி, அமைச்சர் ஜெய்சங்கர், அஜித் தோவல் ஆகியோரை கனடாவுக்குள் நடந்த குற்றச் செயல்களுடன் தொடர்பு படுத்துவது குறித்து கனடா அரசு எதுவும் கூறவில்லை. அதற்கு ஆதாரங்களும் இல்லை. மற்றபடி ஊடகங்களில் வெளியான தகவல்கள் ஊகமானது, தவறானது என்று தெரிவித்துள்ளது.

# சத்தீஷ்கரில் நடந்த என்கவுன்டரில் 10 நக்சலைட்டுகள் சுட்டுக்கொலை

**சுக்மா, நவ. 23-**

சத்தீஷ்கரில் பாதுகாப்பு படையினர் நடத்திய என்கவுன்டரில் நக்சலைட்டுகள் 10 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



இந்தியாவில் நக்சலைட்டுகள் ஆதிக்கம் மிகுந்த மாநிலங்களில் ஒன்றாக சத்தீஷ்கர் உள்ளது. இம்மாநிலத்தில், நக்சலைட்டுகள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

நக்சலைட்டுகளுக்கு எதிரான இந்த தேடுதல் நடவடிக்கையின் போது அவ்வப்போது பாதுகாப்பு படையினருக்கும் நக்சலைட்டுகளுக்கும் இடையே என்கவுன்டர் நடைபெறுகிறது.

அந்த வகையில், சத்தீஷ்கரின் சுக்மா மாவட்டத்தில் உள்ள கோன்டா மற்றும் கிஷ்தாம் பகுதி அருகே நக்சலைட்டுகள் நடமாட்டம் இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அந்த இடத்தை சுற்றி வளைத்து தீவிர தேடுதல் வேட்டையில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டனர். அப்போது, அங்கு நக்சலைட்டுகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை ஏற்பட்டது.

இந்த மோதலில் நக்சலைட்டுகள் 10 பேர் கொல்லப்பட்டனர். சுட்டுக் கொல்லப்பட்ட 10 நக்சலைட்டுகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. உடல்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது. பலியான நக்சலைட்டுகள் வசம் இருந்து ஏகே 47 உள்ளிட்ட துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து அப்பகுதியில் தேடுதல் வேட்டையில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 207 நக்சலைட்டுகள் உடல்கள் மீட்கப்பட்டு இருப்பதாக போலீசார் தெரிவித்தனர்.

# கிழக்கு லெபனானில் இஸ்ரேலின் வான்வழி தாக்குதலில் 47 பேர் பலி

**பெய்ரூட்,நவ. 23-**

கிழக்கு லெபனானில் இஸ்ரேல் படை நடத்திய வான்வழி தாக்குதலில் 47 பேர் பலியானார்கள்.

இஸ்ரேல் மீது கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு கொடூர தாக்குதல் நடத்தியது. இதில் அந்நாடு கடுமையாக பாதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் பணயகைதிகளாக பிடித்து செல்லப்பட்டனர்.

ஓராண்டுக்கு மேலாக நடந்து வரும் மோதலில் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காசா பகுதியில் உயிரிழந்து உள்ளனர். லட்சக்கணக்கானோர் காயமடைந்து உள்ளனர். இதனை காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக, ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பும் போரில் ஈடுபட்டு வருகிறது. லெபனான் நாட்டில் இருந்தபடி, இஸ்ரேலை தாக்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, இஸ்ரேல் பதிலடி தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், கிழக்கு லெபனானின் கவர்னரேட் பால்பெக் - ஹெர்மெல் உள்ள பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் குறைந்தது 47 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 22 பேர் காயமடைந்தனர் என்று கவர்னர் பச்சீர் கோடர் தெரிவித்துள்ளார்.

கவர்னரேட் முழுவதும் உள்ள பல்வேறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் உயிரிழப்புகள் நிகழ்ந்தன, அழிக்கப்பட்ட வீடுகளின் இடிபாடுகளுக்கு அடியில் காணாமல் போனவர்களை மீட்புக் குழுக்கள் இன்னும் தேடி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேலிய ராணுவம் நேற்று முன்தினம் தெற்கு மற்றும் கிழக்கு லெபனானில் 48 வான்வழி தாக்குதல்களை நடத்தியதாகவும், அதே சமயம் தெற்கு லெபனானில் உள்ள 18 எல்லை நகரங்கள் மற்றும் கிராமங்களை குறிவைத்து சுமார் 100 குண்டுகள் வீசியதாகவும் லெபனான் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

# மாநாட்டில் நடிகர் விஜய் பேச்சு: எஸ்.ஏ.சந்திரசேகர் புகழாரம்

**சென்னை, நவ. 23-**

தமிழக வெற்றிக்கழகம் கட்சியின் முதல் மாநாடு கடந்த மாதம் 27 ஆம் தேதி விக்கிரவாண்டியில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் தொண்டர்கள் மத்தியில் சுமார் 45 நிமிடங்கள் விஜய் உரையாற்றினார். தனது பேச்சில் திமுக மற்றும் பாஜகவை கடுமையாக விமர்சித்தார்.

விஜய்யின் ஆக்ரோஷ பேச்சு தங்களை மெய் சிலிர்க்க வைத்ததாக மாநாட்டில் கலந்து கொண்ட தவெக தொண்டர்கள் கூறி சிலாகித்தனர். இந்த நிலையில், விஜய்யின் தந்தையும், இயக்குநருமான எஸ்.ஏ.சி சந்திரசேகரும் மாநாட்டில் விஜய் பேசியதை பார்த்து பிரமித்துவிட்டதாக கூறியுள்ளார். இது குறித்து எஸ்.ஏ.சந்திரசேகர் கூறியதாவது:

“மாநாட்டில் விஜய் கலக்கிவிட்டார். அவர் இப்படி பேசுவார் என நான் நினைக்கவே இல்லை. என் மகன் சினிமாவில் நடித்து பார்த்திருக்கிறேன். ஆனால், மேடையில் அப்படி பேசியதை பார்த்து பிரமித்துவிட்டேன்.

முதலில் அமைதியாக பார்த்துக் கொண்டே இருந்தேன். பின்பு என்னை அறியாமல் கைதட்ட ஆரம்பித்துவிட்டேன். மனதிற்குள் இருக்கும் வேகம், சமூகத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற தாகம் என அனைத்தும் சேர்ந்துதான் அப்படி விஜய்யை பேச வைத்தது” என்றார்.

# பிரபல நடிகை சீதா வீட்டில் 4.5 பவுன் நகை திருட்டு

### வேலைக்கார பெண்களிடம் போலீசார் விசாரணை

**சென்னை, நவ. 23-**

பிரபல நடிகை சீதா வீட்டின் படுக்கை அறையில் வைத்திருந்த 4.5 பவுன் நகை திருடு போனது தொடர்பாக அவரது வீட்டில் பணியாற்றும் 2 வேலைக்கார பெண்களை பிடித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை சாலிகிராமம் புஷ்பா காலனியில் நடிகை சீதா(56) வசித்து வருகிறார். பிரபல நடிகையான இவர், நடிகர் பார்த்திபனின் முன்னாள் மனைவி ஆவார். தனது கணவரை பிரிந்து சீதா தற்போது தனியாக வசித்து வருகிறார்.

இதற்கிடையே கடந்த 31-ம் தேதி சீதாவின் சகோதரர் மனைவி அணிந்து இருந்த 4.5 பவுன் நகையை கழற்றி ஒரு பையில் படுக்கையில் வைத்துள்ளார். அதன் பிறகு பார்த்த போது நகை மாயமாகி இருந்தது.

இது குறித்து சீதா தனது வீட்டில் கடந்த 10 ஆண்டுகளாக வேலை செய்து வரும் சவுந்தரி மற்றும் 4 ஆண்டுகளாக பணியாற்றி வரும் சந்தியா ஆகியோர் மீது சந்தேகம் இருப்பதாக விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அந்த புகாரின்படி போலீசார் வேலைக்கார பெண்களான சவுந்தரி மற்றும் சந்தியாவிடம் விசாரணை நடத்தி வந்த நிலையில், நகை திருடியது தொடர்பாக போலீசார் 2 வேலைக்கார பெண்கள் மீது வழக்கு பதிவு செய்து தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன்பு நடிகர் பார்த்திபன் தனது அலுவலகத்தில் இருந்து 12 பவுன் மாயமானதாக புகார் அளித்திருந்த நிலையில் முன்னாள் மனைவியும் நடிகையுமான சீதா நகை மாயமானது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# உக்ரைனை தாக்கியது ஒரேஷ்னிக் என்ற புதிய ஏவுகணை: புடின்

**மாஸ்கோ, நவ. 23-**

அணு அல்லாத ஹைப்பர்சோனிக் கட்டமைப்பு கொண்ட புதிய ஒரேஷ்னிக் ஏவுகணை உக்ரைன் இலக்கை துல்லியமாக தாக்கியது வெற்றிகரமாக அமைந்தது என்று அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்து ஆயிரம் நாட்களை தாண்டியுள்ள நிலையிலும் சண்டை முடிவுக்கு வரவில்லை. கடந்த சில தினங்களுக்கு முன் உக்ரைன் நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை பயன்படுத்த அமெரிக்க அதிபர் ஜோபைடன் அனுமதி அளித்தார்.

இதனைத் தொடர்ந்து உக்ரைன் ரஷ்யா மீது அமெரிக்கா வழங்கிய ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடியாக உக்ரைன் ரஷ்யா ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தியது.

உக்ரைன் மீது முதன்முறையாக கண்டம் விட்டு கண்டம் தாக்கும் பாலிஸ்டிக் ஏவுகணையை பயன்படுத்தியதாக உக்ரைன் குற்றம்சாட்டியது. இவ்வாறு செய்தி வந்த நிலையில், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மிட்-ரேஞ்ச் பாலிஸ்டிக் ஏவுகணையை உக்ரைன் பகுதி மீது செலுத்தி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த சோதனையில் ஏவுகணை உக்ரைன் இலக்கை துல்லியமாக தாக்கியது வெற்றிகரமாக அமைந்தது என புடின் தெரிவித்துள்ளார். இந்த ஏவுகணைக்கு ஒரேஷ்னிக் என பெயரிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரேஷ்னிக் அணு அல்லாத ஹைப்பர்சோனிக் கட்டமைப்பு கொண்டது. நொடிக்கு 2.5 முதல் 3 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக் கூடியது. நவீன ஏர் பாதுகாப்பு சிஸ்டங்கள் கூட இதை தடுத்து நிறுத்த முடியாது. தடுத்து நிறுத்துவதற்கான சாத்தியம் இல்லை.

தற்போதைய நிலவரப்படி, இந்த ஏவுகணையை எதிர்கொள்ள எந்த வழியும் இல்லை என புடின் தெரிவித்துள்ளார். ரஷ்யாவை நோக்கி நேட்டோ நாடுகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த ஒரேஷ்னிக் சோதனை என புடின் தெரிவித்துள்ளார்.

## 23-11-2024




**மேஷம்:-** குழந்தைகளால் தொல்லை உண்டாகும். நண்பர்களிடம் வீண் விவாதங்களைக் தவிர்ப்பது நல்லது. வியாபாரிகளுக்குத் தொழிலில் எதிர்பார்த்த இலாபம் இருக்காது.

**ரிஷபம்:-** வழக்குகளை இன்று தள்ளிப் போடுவது நல்லது. மதிப்பு மிக்க பொருட்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அன்னையின் உடல் நிலையில் மிகுந்த அக்கறை தேவை.

**மிதுனம்:-** தொழில் தொடர்பான தூரப் பயணங்களால் ஆதாயம் ஏற்படும். எடுத்த காரியங்கள் அனைத்தும் வெற்றி பெறும். உடன்பிறப்புக்களின் உதவி மனத் தெம்பைத் தரும்.

**கடகம்:-** உறவுகளிடையே வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்தால் வீட்டில் நிம்மதி நிலவும். மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வது அவசியமாகும். தொழிலில் அதிக முதலீடு செய்வதைத் தவிருங்கள்.

**சிம்மம்:-** பல வழிகளிலும் பணம் வந்து மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். பெண்கள் விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வர். ஆணையிடும் அதிகாரபதவி கிடைக்கலாம்.

**கன்னி:-** அதிக குடும்பச் செலவுகள் காரணமாகக் கையிருப்புக் குறையும். உங்கள் உண்மையான உழைப்பு விழலுக்கு இறைத்த நீராகும். நண்பர்களிடம் பகமை பாராட்டாது இருப்பது நல்லது.

**துலாம்:-** பலவழிகளிலும் இலாபம் பெருகும். சுகம், சந்தோஷம், பயணத்தில் உல்லாசம் ஆகியவை ஏற்படும். தன வரவு கூடும். வியாபாரிகளுக்குத் தொழில் விருத்தி ஏற்படும்.

**விருச்சிகம்:-** தனலாபம் பெருகும். மனைவியின் ஒத்துழைப்பால் மனம் மகிழும். மாணவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். வியாபாரிகள் வாடிக்கையாளரைக் கவர பரிசுத் திட்டங்களை அறிவிப்பர்.

**தனுசு:-** புனித யாத்திரைகளை மன மகிழ்ச்சியுடன் சென்று வருவீர்கள். .பலவழிகளிலும் பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். கனிவான பேச்சால் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள்.

**மகரம்:-** வீட்டில் ஒற்றுமை இன்மையால் ஒருவிதக் குழப்பம் நிலவும். இஷ்டத்துக்கு மாறாகவே எல்லாம் நடக்கும். சிலருக்குக் கோர்ட் படி ஏறவேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

**கும்பம்:-** தம்பதிகளின் ஒற்றுமையால், குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். பதவி உயர்வால் வாகனயோகம் ஏற்படும். தர்ம காரிய ஈடுபாடு வாழ்க்கையில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தும்.

**மீனம்:-** பெண்களால் இலாபம் ஏற்படும். பிள்ளைகள் உங்களுக்குப் பெருமை சேர்ப்பர். பிரிந்திருந்த உறவுகள் பேரன்பால் ஒன்று சேரும். எல்லாவகையிலும் சந்தோஷம் அதிகரிக்கும்.

# ஒருங்கிணைந்த நல்வாழ்வு மற்றும் காலநிலை மையம்: தமிழக அரசாணை வெளியீடு

**சென்னை, நவ. 23-**

ஒருங்கிணைந்த நல்வாழ்வு மற்றும் காலநிலை மையம் அமைப்பதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- காலநிலை மாற்றத்தின் காரணமாக, மக்கள், விலங்குகள், சுற்றுச்சூழல் சுகாதாரம் ஆகியவற்றுடன் பின்னிப்பிணைந்த சிக்கல்களை எதிர்கொள்வதற்கான ஒரு முன்னோடி முயற்சியாக, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் ஒருங்கிணைந்த நல்வாழ்வு மற்றும் காலநிலை மையத்தை அமைப்பதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நல்வாழ்வு என்பது, மக்கள், விலங்குகள் மற்றும் சூழலியல் அமைப்புகளின் நல்வாழ்வை சமநிலைப்படுத்துவதையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட ஓர் ஒருங்கிணைந்த மற்றும் ஓரலகுக் கட்டமைப்பு என உலக சுகாதார நிறுவனம் வரையறுத்துள்ளது.

விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்கள், நோய்க்கடத்திகள் வாயிலாகப் பரவும் நோய்கள், நுண்ணுயிர் எதிர்ப்புத்திறன், பல்லுயிர்ப்பெருக்கத்துக்கு ஏற்படும் இழப்பு, காலநிலை மாற்றம் போன்றவற்றில் ஏற்படும் சிக்கல்களை எதிர்கொள்வதற்கு, பொது சுகாதாரம், கால்நடை மருத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் போன்ற பல்வேறு துறைகளின் கூட்டு முயற்சிகளை ஒருங்கிணைந்த நல்வாழ்வு மையம் வலியுறுத்துகிறது.

காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளில் முன்னோடியாக உள்ள மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாடு, வெப்பநிலை அதிகரிப்பு, விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் பெருந்தொற்றுகள், நோய்க்கடத்திகள் வாயிலாகப் பரவும் நோய்கள், கடலோரப்பகுதிகளின் பாதிப்புகள் மற்றும் பல்லுயிர்ப்பெருக்கத்திற்கு ஏற்படும் இழப்பு உள்ளிட்ட தனித்தன்மை வாய்ந்த பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு வருகிறது.

இந்தச் சிக்கல்களை எதிர்கொள்வதற்கு, குறிப்பாக, பழங்குடியினர் வாழும் பகுதிகள், கடலோரப் பகுதிகள் மற்றும் அதிக இடர்பாடுகளை எதிர்கொள்ளும் பகுதிகள் போன்ற பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளில் வசிக்கும் சமூகத்தினரின் நல்வாழ்வைப் பாதுகாப்பதற்கு ஒருங்கிணைந்த மற்றும் முன்னெச்சரிக்கை வாய்ந்த அணுகுமுறை அவசியமாகிறது.

ஒருங்கிணைந்த நல்வாழ்வு மற்றும் காலநிலை மையத்தை உருவாக்கியிருப்பது, காலநிலை மாறுபாடு மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேட்டின் பாதிப்புகளுக்கு தீர்வு காண்பதற்கு, காலநிலை மாற்றத்திற்கேற்றவாறு தகவமைத்துக்கொள்ளக்கூடிய வகையிலான ஒரு சுகாதார அமைப்பு முறையை உருவாக்க வேண்டுமென்ற தமிழ்நாட்டின் பொறுப்புணர்வை வெளிப்படுத்துகிறது.

காலநிலை மாற்றம் மற்றும் மக்கள் நலனுக்கான தேசிய திட்டத்தின் இலக்குகளை காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான தமிழ்நாட்டின் உறுதியான முயற்சிகளுடன் இணைப்பதன் வாயிலாக, நிலையான மற்றும் சம அளவிலான வளர்ச்சியை பேணுவதில் இந்த மையம் முக்கிய பங்காற்றும். இந்த மையம், காலநிலைச் சூழ்நிலைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் ஏற்படும் நோய்களின் தீவிரத்தன்மையை மதிப்பிடுவதற்கு செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்தி முன்கூட்டியே கண்டறிந்து செயல்படுத்துவதற்கான மாதிரிகளை உருவாக்குவதற்கு செயல்படும்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் இந்த மையத்திற்கு தலைமை வகிப்பார். தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் திட்ட இயக்குநர், உறுப்பினர் / செயலாளராகவும், தேசிய நல்வாழ்வு இயக்கத்தின் நிருவாக இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்கக இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் இதன் உறுப்பினர்களாவர்.

மேலும் இது, நிபுணத்துவம் பெற்ற ஆலோசகர்களைக் கொண்ட ஒரு செயலகத்தின் உதவியுடன் செயல்படுவதாக அமையும். ஒருங்கிணைந்த நல்வாழ்வு மற்றும் காலநிலை மையம், காலநிலை தூண்டலால் ஏற்படும் உடல்நல சவால்களைச் எதிர்கொள்வதற்கான ஒரு வலிமையான, முற்போக்கு சிந்தனை அணுகுமுறையாக அமையும்.

இது, ஏற்படக்கூடிய சுகாதார கேடுகளை எதிர்கொள்வதற்கு தமிழ்நாட்டினை மேலும் ஆயத்தப்படுத்தும், மீள்தன்மையை அதிகரிப்பதோடு, நிலையான சுகாதார ஏற்பாட்டு முறைகளை ஊக்குவிக்கும். புதுமை, ஒத்துழைப்பு மற்றும் நடவடிக்கைகளை வளர்ப்பதன் வாயிலாக, இந்தியாவில் ஒருங்கிணைந்த நல்வாழ்வு மற்றும் காலநிலை உத்திகளுக்கு இந்த மையம் ஒரு முன்மாதிரியாக அமையும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன்

## இலங்கை அதிபர் திசநாயக உறுதி

**கொழும்பு, நவ. 23-**

இலங்கை நாடாளுமன்ற தேர்தல் கடந்த 14-ம் தேதி நடந்தது. இதில், அதிபர் அநுரகுமார திசநாயகவின் தேசிய மக்கள் சக்தி கூட்டணி(என்பிபி) மொத்தம் உள்ள 225 இடங்களில் 159 இடங்களை கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது.

கடந்த 1989-ம் ஆண்டுக்கு பிறகு நாடாளுமன்றத்துக்கு நடந்த தேர்தலில் ஆளும் கட்சி மூன்றில் இரண்டு பங்கு இடங்களை கைப்பற்றியது இதுவே முதல்முறையாகும். என்.பி.பி. கட்சி வெற்றியை தொடர்ந்து பிரதமராக ஹரினி அமரசூரிய பதவியேற்றார். நாடாளுமன்றத்தின் முதல் கூட்டம் நடந்தது. இதில், அதிபர் திசநாயக கொள்கை விளக்க உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

தேர்தலுக்கு முந்தைய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, கடந்த கால தவறுகள் நிவர்த்தி செய்யப்படும். சட்டத்தின் முன் அனைவரும் பொறுப்புக் கூறக்கூடியவர்களாகவும் சமமானவர்களாகவும் ஆக்குவது எங்கள் அரசின் நோக்கம். கடந்த கால குற்றங்களால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்க வேண்டும். முந்தைய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு அனைத்து தரப்பினரின் நம்பிக்கையையும் வென்றெடுப்பதே எங்களுடைய கடமையாகும். ஆட்சியில் இனம், மதம் அல்லது பாகுபாடு அடிப்படையிலான அரசியல் இருக்காது.

சர்வதேச நாணய நிதியத்துடன்(ஐஎம்எப்) ஒப்பந்தம் ஒன்றை நாளைக்குள் இறுதி செய்ய முடியும் என எதிர்பார்க்கிறோம். கடன் மறுசீரமைப்புப் பேச்சுக்கள் இவ்வருடம் டிசம்பர் மாதத்திற்குள் நிறைவடையும். இவ்வாறு அவர் பேசினார்.

# காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கத்தில் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, நவ. 23- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் துல்லிய உற்பத்தி பெருங்குழுமத்தால் முதற்கட்டமாக ரூ.18.18 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

தமிழகத்தின் வடபகுதியில் உள்ள நகரங்களுக்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை கொண்டு செல்லும் நோக்கத்துடன் திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் 11.41 ஏக்கர் பரப்பளவில் ரூ.330 கோடி செலவில் தரை மற்றும் 21 தளங்களுடன் 5.57 லட்சம் சதுரடி பரப்பளவில் டைடல் பூங்கா கட்டப்பட்டு உள்ளது.

இதனை முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் துல்லிய உற்பத்தி பெருங்குழுமத்தால் முதற்கட்டமாக ரூ.18.18 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இப்பெருங்குழும திட்டத்தின் முதல் பகுதியாக ரூ.18.18 கோடி மதிப்பீட்டில் ரூ.13.33 கோடி மானியத்துடன் வடிவமைப்பு மையம், மது பொறியியல் பிரிசோதனைக் கூடம், சேர்க்கை உற்பத்தி மையம், மேம்பட்ட பயிற்சி மையம், காப்புரிமை பதிவு வசதி மையம், நவீன பரிசோதனை மையம் போன்றவை நிறுவப்பட்டுள்ளன.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள 14-க்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தொழிற்பேட்டை சங்கத்தினரால் இணைந்து உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கு ஊர்தி மூலம் அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் பொது வசதிகளை தமிழகத்தில் உள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், இளம் தலைமுறை தொழில் முனைவோர்கள், பொறியாளர்கள், கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பயன்படுத்தி பயன்பெறலாம்.

# டெல்லி சட்டசபை தேர்தல்: கெஜ்ரிவால் அறிவித்த 6 முக்கிய வாக்குறுதிகள்

புது டெல்லி, நவ. 23- டெல்லி சட்டசபை தேர்தலுக்கான பிரச்சாரத்தை நேற்று தொடங்கிய ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் கெஜ்ரிவால், வரும் சட்டசபை தேர்தலில் ஆம்ஆத்மி கட்சியை வெற்றி பெற செய்தால், இலவச மின்சாரம், கல்வி உள்ளிட்ட 6 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என அறிவித்தார்.

டெல்லியில் தற்போது ஆம்ஆத்மி ஆட்சி நடந்து வருகிறது. அதிஷி முதல்வராக உள்ளார். டெல்லி சட்டசபைக்கு அடுத்தாண்டு சட்டசபை தேர்தல் நடக்க உள்ளது. ஆட்சியை தக்க வைக்க, ஆம்ஆத்மி அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இந்நிலையில், நேற்று சட்டசபை தேர்தலுக்கான தேர்தல் பிரசாரத்தை ஆம்ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளர் கெஜ்ரிவால் துவக்கி வைத்தார். பின்னர் அவர் பேசியதாவது:

ஆம்ஆத்மி கட்சிக்கு மக்கள் ஓட்டளிக்க வேண்டும். பா.ஜ.க ஆட்சிக்கு வந்தால் தனது கட்சியால் வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் நிறுத்தப்படும். ஆம் ஆத்மி கட்சி ஆட்சி வந்தால் 6 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும். எங்களது வாக்குறுதிகள் குறித்து மக்களுக்கு தெரியப்படுத்த, 65 ஆயிரம் கூட்டங்களை ஆம்ஆத்மி நடத்தும். இவ்வாறு அவர் பேசினார். இலவச கல்வி, இலவச மின்சாரம், இலவச தண்ணீர், இலவச மருத்துவ சிகிச்சை, இலவச பஸ் பயணம், பெண்களுக்கு மாதம் ரூ. ஆயிரம் வழங்கப்படும், அயோத்தி, வாரணாசி உள்ளிட்ட முக்கிய வழிபாட்டு தலங்களுக்கு மூத்த குடிமக்களை வழிபாடு செய்ய அழைத்து செல்வோம் என்ற 6 வாக்குறுதிகளை கெஜ்ரிவால் அறிவித்தார்.

# நாட்டின் அறிவுசார் பாரம்பரியத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்

## ஐதராபாத் விழாவில் ஜனாதிபதி திரௌபதி முர்மு பேச்சு

ஐதராபாத், நவ. 23- அனைத்து மக்களும் இந்தியாவின் கலாச்சார மற்றும் அறிவுசார் பாரம்பரியத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் நேற்று நடைபெற்ற லோக்மந்தன்-2024 தொடக்க விழாவில் ஜனாதிபதி திரௌபதி முர்மு உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது.

இந்தியாவின் வளமான கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் மரபுகளில் ஒற்றுமையின் இழைகளை வலுப்படுத்த இந்நிகழ்ச்சி ஒரு பாராட்டத்தக்க முயற்சி. அனைத்து மக்களும் இந்தியாவின் கலாச்சார மற்றும் அறிவுசார் பாரம்பரியத்தை புரிந்து கொள்ள வேண்டும். நமது விலைமதிப்பற்ற மரபுகளை வலுப்படுத்த வேண்டும்.

பன்முகத்தன்மை நமது அடிப்படை ஒற்றுமைக்கு அழகின் வானவில்லை வழங்குகிறது. நாம் வனவாசிகளாக இருந்தாலும், கிராமவாசிகளாக இருந்தாலும் அல்லது நகரவாசிகளாக இருந்தாலும், நாம் அனைவரும் இந்தியர்கள்.

இந்த தேசிய ஒற்றுமை உணர்வு அனைத்து சவால்களையும் மீறி நம்மை ஒற்றுமையாக வைத்திருக்கிறது. நமது சமூகத்தைப் பிளவுபடுத்தவும் பலவீனப்படுத்தவும் பல நூற்றாண்டுகளாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நமது இயற்கையான ஒற்றுமையை குலைக்க செயற்கையான வேறுபாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆனால், நமது குடிமக்கள் இந்திய தன்மையின் உணர்வால் தேசிய ஒற்றுமை தீபத்தை ஏற்றி வைத்திருக்கின்றார்கள்.

பண்டைய காலம் முதலே இந்திய சித்தாந்தத்தின் தாக்கம் உலகில் பரவியுள்ளது. இந்தியாவின் மத நம்பிக்கைகள், கலை, இசை, தொழில்நுட்பம், மருத்துவ முறைகள், மொழி, இலக்கியம் ஆகியவை உலகம் முழுவதும் பாராட்டப்பட்டுள்ளன.

லட்சிய வாழ்க்கைக்கான விழுமியங்களை உலக சமுதாயத்திற்கு முதன்முதலில் பரிசளித்தவர்கள் இந்தியத் தத்துவ ஞானிகள். நமது முன்னோர்களின் அந்தப் பெருமைமிகு பாரம்பரியத்தை வலுப்படுத்த வேண்டியது நமது பொறுப்பு. இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற மக்களிடையே தேசம் முதலில் என்ற உணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும். இந்த உணர்வை லோக் மந்தன் பரப்பி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. இவ்வாறு அவர் பேசினார்.

## திருப்பதி ஏழுமலையானை தரிசிக்க

# பிப்ரவரி மாதத்துக்கான தரிசன டிக்கெட்டுகள் இன்று வெளியீடு

திருமலை, நவ. 23- திருப்பதி ஏழுமலையானை தரிசிக்க பிப்ரவரி மாதத்துக்கான தரிசன டிக்கெட்டுகள் இன்று வெளியிடப்படுகிறது.

இது குறித்து திருப்பதி தேவஸ்தானம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

திருப்பதி தேவஸ்தானம் 2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்துக்கான அங்கப்பிரதட்சணம் டோக்கன்களை ஆன்லைனில் இன்று (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு வெளியிடுகிறது. பிப்ரவரி மாதத்துக்கான ஸ்ரீவாணி அறக்கட்டளை தரிசன டிக்கெட்டுகளுக்கான ஆன்லைன் ஒதுக்கீடு இன்று காலை 11 மணிக்கு வெளியாகிறது.

முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் தீராத நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பிப்ரவரி மாதம் திருமலைக்கு வந்து சாமி தரிசனம் செய்ய இலவச சிறப்பு தரிசன டோக்கன்கள் ஒதுக்கீடு இன்று மாலை 3 மணிக்கு ஆன்லைனில் வெளியாகிறது.

பிப்ரவரி மாதத்துக்கான சிறப்பு நுழைவு தரிசன டிக்கெட்டுகளின் ஒதுக்கீடு (ரூ. 300 தரிசன டிக்கெட்) வரும் 25-ம் தேதி (திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு ஆன்லைனில் வெளியிடுகிறது.

திருமலை மற்றும் திருப்பதியில் பிப்ரவரி மாதத்துக்கான அறை ஒதுக்கீடு வரும் 25-ம் தேதி மாலை 3 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும். மேலும் விவரங்களுக்கு பக்தர்கள் *https://ttdevasthanams.ap.gov.in* என்ற இணையதளம் மூலம் ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை மற்றும் தரிசன டிக்கெட்டுகளை முன் பதிவு செய்யலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெசவுத்தொழில் தலைநிமிர நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தமிழக அரசுக்கு இ.பி.எஸ். வலியுறுத்தல்

சென்னை, நவ. 23- தமிழகத்தில் நெசவுத் தொழில் தலைநிமிர்ந்து நிற்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் நெசவாளர்களின் நிலைமை அதல பாதாளத்திற்குச் சென்றுள்ளது. கைத்தறி மற்றும் நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம் என்று பல் வேறு வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சியைப் பிடித்த ஸ்டாலினின் திமுக ஆட்சியில் தாறுமாறாக நூல் விலை உயர்ந்ததுடன், விலையில்லா சீருடை, விலையில்லா வேட்டி, சேலை போன்ற திட்டங்களுக்கான பணிகளை முழுமையாக தமிழக நெசவாளர்களுக்கு வழங்காமல் தொடர்ந்து நிகழ்வு களால், முதலாளிகளாக சொந்தத் தொழில் செய்து வந்த நெசவாளர்கள், தங்களது தறிகளை பழைய இரும்புக் கடைகளுக்கு விற்று விட்டு வேறு தொழில்களுக்கு பணியாட்களாக இடம் மாறி தங்களது வாழ்க்கையை மிகுந்த சிரமத்துடன் நடத்தி வருகின்றனர்.

நெசவாளர்களில் பலர், தாங்கள் வாழும் வீடுகளிலேயே ஒரிரு தறிகள் வைத்து குடிசைத் தொழில்போல் தறிகளை இயக்கி அந்த வருமானத்தில் எளிய வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றார்கள். இந்நிலையில், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல், தமிழகம் முழுவதும் குடிசைத் தொழில்போல ஒரிரு தறிகளை வைத்து நெசவுத் தொழில் செய்து வரும் நெசவாளர்களின் வீட்டிலுள்ள, உள்ளாட்சித் துறை அலுவலர்கள், தறிகள் உள்ள இடங்களைக் கணக்கீடு செய்து அப்பகுதிகளுக்கு வணிக ரீதியில் தொழில் வரி விதிக்கப் போவதாக தகவல்கள் கூறுகின்றன.

குறிப்பாக, சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் இது போன்ற குடிசைத் தொழில் செய்துவரும் நெசவாளர்களின் வீடுகளில் உள்ள தறிக் கூடங்களின் அளவை மாநகராட்சி ஊழியர்கள் அளவீடு செய்து வருவதாகவும்; சதுர அடிக்கு 27 ரூபாய் தொழில் வரி விதிக்க உத்தேசித்துள்ளதாகவும் உள்ளாட்சித் துறை ஊழியர்கள் தெரிவித்த செய்தி, நெசவாளர்களின் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று செய்திகள் வருகின்றன.

குடிசைத் தொழில்போல வீடுகளிலேயே ஒரிரு தறிகள் வைத்து நெசவுத் தொழில் செய்துவரும் நெசவாளர்களின் தலையில் இடி விழுந்தது போல், தறிக் கூடங்களை அளவெடுத்து தொழில் வரி விதிக்க முனைந்துள்ள திமுக அரசுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு, நெசவாளர்களாகிய தங்களுக்கு உதவி செய்யாவிடினும், உபத்திரம் செய்யாமல் இருந்தால் போதும் என்று மிகுந்த மனவேதனையுடன் தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர். எனவே, உடனடியாக தமிழகமெங்கும் இது போன்ற தறிகள் உள்ள பகுதிகளை கணக்கீடு செய்யும் பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டுமென்றும்; நூலுக்கான வரிகளை முழுமையாக நீக்கவும்; கைத்தறி மற்றும் விசைத்தறி மூலம் தயாரிக்கப்படும் ஜவுளிகளுக்கு வரி விதிப்பில் விலக்கு பெற்று, மீண்டும் தமிழகத்தில் நெசவுத் தொழில் தலைநிமிர்ந்து நிற்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து எடுக்க வேண்டும் என்று தமிழக அரசை வலியுறுத்துகிறேன். என தெரிவித்துள்ளார்.

# மணிப்பூர் ஐகோர்ட்டின் 8-வது தலைமை நீதிபதியாக கிருஷ்ணகுமார் பதவியேற்பு

இம்பால், நவ. 23- மணிப்பூர் ஐகோர்ட்டின் 8-வது தலைமை நீதிபதியாக டி. கிருஷ்ணகுமார் நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

சென்னை ஐகோர்ட்டில் மூத்த நீதிபதியாக இருப்பவர் டி.கிருஷ்ணகுமார். இவர், சிறிது காலம் ஐகோர்ட்டின் பொறுப்பு தலைமை நீதிபதியாக பதவி வகித்தார். தற்போது இவரை மணிப்பூர் ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக நியமிக்க சுப்ரீம் கோர்ட்டு மூத்த நீதிபதிகள் கொண்ட கொலீஜியம் முடிவு செய்தது. இது தொடர்பாக மத்திய அரசுக்கு பரிந்துரையும் செய்தது. இந்த பரிந்துரையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டது. இதையடுத்து, நீதிபதி டி.கிருஷ்ணகுமாரை, மணிப்பூர் ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக நியமித்து ஜனாதிபதி திரௌபதி முர்மு உத்தரவு பிறப்பித்திருந்தார். இந்நிலையில், மணிப்பூர் ஐகோர்ட்டின் 8-வது தலைமை நீதிபதியாக டி.கிருஷ்ணகுமார் நேற்று பதவியேற்றுக் கொண்டார். ராஜ்பவனில் உள்ள தர்பார் ஹாலில் நடந்த நிகழ்ச்சியில் அவருக்கு மணிப்பூர் கவர்னர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

# மணிப்பூர் விவகாரம்: காங்கிரஸ் மீது ஜே.பி. நட்டா குற்றச்சாட்டு

புது டெல்லி, நவ. 23- வடகிழக்கு மாநிலங்களையும், மக்களையும் காங்கிரஸ் கட்சி அரசியல் லாபத்திற்காக பயன்படுத்துவதாக மத்திய அமைச்சர் ஜே.பி. நட்டா குற்றம்சாட்டியுள்ளார். மணிப்பூரில் மீண்டும் வன்முறை வெடித்துள்ளது. இதனிடையே, மணிப்பூர் விவகாரத்தில் தலையிடுமாறு ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில்,

மணிப்பூரில் மக்களின் பாதுகாப்பையும், சட்டம் ஒழுங்கையும் பாதுகாக்க அம்மாநில அரசும், மத்திய அரசும் தவறிவிட்டது. அங்கு மக்கள் கண்ணியத்துடனும், அமைதியான வாழ்வதையும் உறுதி செய்ய ஜனாதிபதி தலையிட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், கார்கேவின் கடிதத்திற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, மத்திய அமைச்சர் ஜே.பி. நட்டா அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-கடந்த பார்லிமென்ட் கூட்டத்தில் மணிப்பூர் கலவரம் குறித்து பிரதமர் மோடி விளக்கம் அளிக்கும் போது, அவையில் இருந்து வெளிநடப்பு செய்தது, காங்கிரஸ் கட்சியினர் மரியாதை குறைவாகவும், பொறுப்பில்லாமல் நடந்து கொண்டதற்கு சாட்சியாகும். ஜனாதிபதி குறித்து பல்வேறு விமர்சனங்களை செய்து விட்டு, தற்போது அவருக்கே நீங்கள் கடிதம் எழுதியிருப்பது என்னை வியக்க வைத்துள்ளது. ஜனாதிபதிக்கு காங்கிரஸ் கட்சியினர் மரியாதை கொடுத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. தற்போது, உங்களின் பொய்யான, அரசியல் நோக்கம் கொண்ட குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் மத்தியிலும், மாநிலத்திலும் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த போது, தவறான உத்திகள் மற்றும் அரசு இயந்திரங்களின் தோல்வியால், இதுபோன்ற சம்பவங்கள் நடந்திருப்பதை நீங்கள் கட்சியினர் மறந்து விட்டார்கள். கடந்த 10 ஆண்டுகளில் வடகிழக்கு மாநிலங்களில் பாதுகாப்பு, பொருளாதாரம், சுகாதாரம், கல்வியில் வளர்ச்சியடைந்திருக்கிறது. துப்பாக்கிச்சூடு, வெடிகுண்டு தாக்குதல் என எப்போதும் நிகழ்ந்து கொண்டிருந்த வடகிழக்கு மாநிலங்களில் தற்போது, அமைதி, வளர்ச்சி பாதையில், சுதந்திரத்திற்கு பிறகு முதல்முறையாக இருப்பதை பிடித்துள்ளது.

மணிப்பூரில் மட்டும் கடந்த 2013-ம் தேதி 20 தடவைதமாக இருந்த வறுமை, கடந்த 2022ல் 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியை இப்போதும் ஏற்றுக் கொள்ளாத நீங்களும், உங்கள் கட்சியினரும், வடகிழக்கு மாநிலங்களையும், மக்களையும் உங்கள் அரசியல் லாபத்திற்காக பயன்படுத்துகிறீர்கள்.

1990 காலகட்டத்தில் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் நிகழ்ந்த வன்முறையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அதே போல, 2011-ல் பிற மாநிலங்களை காட்டிலும் மணிப்பூரில் 4 முறை கேஸ் மற்றும் பெட்ரோல் விலை உயர்த்தப்பட்டது. இந்த பிரச்னைகளை தீர்க்க காங்கிரஸ் தவறி விட்டது. ஆனால், தற்போது, மணிப்பூர் விவகாரத்தில் மத்திய, மாநில அரசுகள் மக்களை பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில் மத்திய அரசு முழுமூச்சாக செயல்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட சூழலில், மீண்டும், மீண்டும் மணிப்பூர் விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி அரசியல் செய்வது தான் அதிர்ச்சியளிக்கிறது. இவ்வாறு அந்த கடிதத்தில் ஜே.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

## கோவை வடக்கு மாவட்ட செயலாளர் உள்பட

# சீமான் கட்சியில் இருந்து 4 நிர்வாகிகள் விலகல்

கோவை, நவ. 23- கோவை வடக்கு மாவட்ட செயலாளர் ராமசந்திரன் உட்பட நிர்வாகிகள் 4 பேர் நாம் தமிழர் கட்சியில் இருந்து நேற்று விலகினர்.

நாம் தமிழர் கட்சியில் இருந்து சமீப நாட்களாக நிர்வாகிகள் விலகி வருகின்றனர். அந்த வகையில் தற்போது கோவை மாவட்டத்திலும் நாம் தமிழர் கட்சியின் வடக்கு மாவட்ட செயலாளர் உள்பட 4 நிர்வாகிகளும் அக்கட்சியில் இருந்து விலகி விட்டனர்.

நாம் தமிழர் கட்சியின் கோவை வடக்கு மாவட்ட செயலாளராக இருந்தவர் பெரியகுளம் ராமச்சந்திரன். இவர் நேற்று தான் வகித்து வந்த, மாவட்ட செயலாளர் பொறுப்பு மற்றும் அடிப்படை உறுப்பினரில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

அவருடன் கோவை வடக்கு மாவட்ட மகளிரணி செயலாளர் அபிராமி, வணிகர் பாசறை மாவட்ட செயலாளர் செந்தில்குமார், கோவை வடக்கு மாவட்ட தொழிற்சங்க பேரவை செயலாளர் ஏழுமலை ஆகியோரும் கட்சியில் இருந்து விலகினர்.

கட்சியில் இருந்து விலகியது குறித்து நாம் தமிழர் கட்சியின் கோவை வடக்கு மாவட்ட செயலாளராக இருந்த ராமச்சந்திரன் கூறியதாவது:-

கடந்த 10 வருடமாக நாங்கள் நாம் தமிழர் கட்சியில் பயணித்தோம். சீமான் முதல் வரவாளர். அதற்கான வெற்றி இலக்கை அடைவார் என்ற நோக்கிலேயே நாங்கள் தீவிரமாக களப்பணியாற்றி வந்தோம்.

ஆனால் சமீப காலமாக சீமான் தனது கொள்கைகளில் இருந்து விலகி முன்னுக்குப்பின் முரணாக பேசி வருகிறார். செயல்பட்டு வருகிறார். கொங்கு மண்டலத்தில் அருந்ததியர் சமூகத்தின் பங்கு என்பது மிகப்பெரியது.

அப்படிப்பட்டவர்களை பார்த்து சீமான் வந்தேறிகள் என்று பேசியது பெரிய பிரச்சனையாக மாறியது. மேலும் எங்களது உறவினர்கள் ஏராளமானோர் தி.மு.க மற்றும் அ.தி.மு.க.வில் உள்ளனர். இதற்கு பிறகு அவர்களும் எங்களை வீட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை தவிர்த்து வந்தனர்.

சீட் தராததால் கட்சியில் இருந்து விலகுவதாக கூறுவது முற்றிலும் தவறானது. சீமான் கொள்கைகளில் முரண்பட்டு செயல்பட்டதாலேயே நாங்கள் கட்சியில் இருந்து விலகுகிறோம். எங்களை தொடர்ந்து இன்னும் கோவை வடக்கு மாவட்டத்தில் உள்ள நாம்தமிழர் கட்சியை சேர்ந்த நிர்வாகிகளும், தொண்டர்களும் ஒட்டுமொத்தமாக கட்சியில் இருந்து விலகுவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## மாநாட்டிற்கு நிலம் கொடுத்தவர்களை

# இன்று கவுரவிக்கிறார் த.வெ.க. தலைவர் விஜய்

சென்னை, நவ. 23- விக்கிரவாண்டியில் த.வெ.க. அரசியல் மாநாட்டிற்கு நிலம் கொடுத்தவர்களை விஜய் கவுரவிக்க உள்ளார்.

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியை தொடங்கியிருக்கிறார். இந்த கட்சியின் முதல் மாநாடு கடந்த மாதம் 27-ம் தேதி விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் விஜய்யின் பரபரப்பான பேச்சு தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது.மாநாட்டை தொடர்ந்து 2026-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள தமிழக வெற்றிக்கழகம் தயாராகி வருகிறது. அதற்கேற்ப அரசியல் வியூகங்களை விஜய் அமைத்து வருகிறார்.

இந்த நிலையில், விக்கிரவாண்டியில் த.வெ.க. மாநாட்டிற்கு நிலம் கொடுத்தவர்களை விஜய் கவுரவிக்க உள்ளார். நிலம் கொடுத்தவர்களை விருந்து அளித்து விஜய் கவுரவிக்க உள்ளார். சென்னை பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெற உள்ளது என தகவல் வெளியாகியுள்ளது .

# கேரளாவில் பயங்கரம்: குடும்பத்தகராறில் பெண் போலீஸ் கணவனால் வெட்டிக்கொலை

திருவனந்தபுரம், நவ. 23- கேரளாவில் குடும்பத்தகராறில் பெண் போலீசை வீடு புகுந்து சரமாரியாக வெட்டிக்கொன்று தப்பி ஓடிய கணவனை போலீசார் கைது செய்தனர்.

கேரள மாநிலம் காசர்கோடு மாவட்டத்திற்கு உட்பட்ட சந்தேரா காவல் நிலையத்தில் சிவில் காவலராக பணிபுரிந்து வந்தவர் திவ்யஸ்ரீ (வயது 35). இவருக்கும் கணவர் ராஜேஷுக்கும் (வயது 40) இடையே கடந்த சில மாதங்களாக கருத்து வேறுபாடு இருந்து வந்தது. இந்த நிலையில் கரிவள்ளூரில் உள்ள பெற்றோர் வீட்டில் திவ்யஸ்ரீ 8 வயது மகனுடன் தனியாக வசித்து வந்துள்ளார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் இவர்களது விவாகரத்து வழக்கு விசாரணைக்கு வந்தது. வழக்கு விசாரணை முடிந்த பிறகு திவ்யஸ்ரீ வீட்டுக்கு திரும்பினார். இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை சுமார் 6 மணியளவில் பைக்கில் மனைவியின் வீட்டுக்கு சென்றுள்ளார் ராஜேஷ். அவரது வீட்டிற்கு வந்த ராஜேஷ், திவ்யஸ்ரீயை கத்தியால் சரமாரியாக குத்தியுள்ளார். அதை தடுக்க முயன்ற திவ்யஸ்ரீயின் தந்தை வாசுவையும் ராஜேஷ் வெட்டியுள்ளார்.

இந்த சம்பவத்தில் கழுத்திலும் மார்பிலும் படுகாயங்களுடன் ரத்த வெள்ளத்தில் கிடந்த திவ்யஸ்ரீயை அக்கம் பக்கத்தினர் மீட்டு பையனூர் காயூ மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் திவ்யஸ்ரீ வரும் வழியிலேயே உயிரிழந்து விட்டதாக கூறினர். படுகாயமடைந்த திவ்யஸ்ரீயின் தந்தை வாசு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து வளபட்டணம் போலீசில் புகார் செய்யப்பட்டது. அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். தப்பி ஓடிய ராஜேஷ் அங்குள்ள ஒரு பாரில் இருப்பது தெரிய வந்தது. உடனே போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். பின்னர் அங்கு இருந்த ராஜேஷை சுற்றி வளைத்து கைது செய்தனர். தொடர்ந்து அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். கேரளாவில் பெண் போலீசை கணவர் வெட்டிக் கொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

# ஆசிரியையை கொலை செய்தது ஏன்? காதலன் வாக்குமூலம்


தஞ்சை, நவ. 23- ஆசிரியை ரமணியை அவரது காதலன் மதன்குமார் பள்ளிக்குச் சென்று சரமாரியாக கத்தியால் குத்திக் கொலை செய்த சம்பவத்தில், கொலை குறித்து அவர் பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளார்.

தஞ்சை மாவட்டம் மல்லிப்பட்டினம் அரசு உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றிய தற்காலிக ஆசிரியை ரமணியை, கடந்த புதன்கிழமை அவரது காதலன் மதன்குமார் பள்ளிக்குச் சென்று சரமாரியாக கத்தியால் குத்திக் கொலை செய்தார். இது தொடர்பாக கைது செய்யப்பட்ட மதன்குமார் புதுக்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக காவல்துறையினர் மதன்குமாரிடம் விசாரணை நடத்தினர். அப்போது மதன்குமார் அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்ததாவது., ரமணியும் நானும் ஒரே பகுதியை சேர்ந்தவர்கள். இருவரும் இரண்டு ஆண்டுகளாக காதலித்து வந்தோம். எங்களது காதல் குறித்து பெற்றோரிடம் தெரிவித்தேன். இதனை அடுத்து அவரை திருமணம் செய்து வைப்பதற்காக கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் எனது பெற்றோர் ஆசிரியர் ரமணியின் வீட்டிற்கு சென்று பெண் கேட்டனர்.


அதற்கு ரமணியின் பெற்றோர், எனது மகள் ஆசிரியராக உள்ளார். மீன்பிடித் தொழில் செய்பவருக்கு எங்கள் மகளை தர விருப்பம் இல்லை என தெரிவித்துவிட்டனர். இருப்பினும் நான் தொடர்ந்து ரமணியிடம் பேசி நமது திருமணத்திற்கு தான் முயற்சி செய்து வருகிறேன் என தெரிவித்தேன். ஆனால் அவர் ரமணி என்னிடம் பேசுவதை தவிர்த்தார். எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அவள் புரிந்து கொள்ள வில்லை. அவர் வேலை செய்யும் பள்ளிக்கு சென்று "நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது" என்று கூறினேன். ஆனால், ரமணி உன்னை திருமணம் செய்ய முடியாது, நீ இங்கிருந்து போய் விடு என்று விரட்டினார். எவ்வளவோ போராடியும் திருமணத்துக்கு மறுத்ததால் கத்தியை எடுத்து கழுத்தில் குத்திக்கொலை செய்தேன். இவ்வாறு போலீசாரிடம் மதன்குமார் வாக்குமூலம் அளித்துள்ளார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்களை குத்தகைக்கு வாங்குவதா? அண்ணா பல்கலைக்கழகத்திற்கு தினக்கூலி அடிப்படையிலான ஆசிரியர்களை குத்தகை முறையில் நியமிப்பதை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. இந்த முடிவை தமிழக அரசு கைவிட வேண்டும்.

- அன்புமணி



அ.தி.மு.க. ஆட்சியில் காவல் துறை சுதந்திரமாக செயல்பட்டது. ஆனால் தற்போதைய ஆட்சியில் காவல்துறையின் கைகள் கட்டப்பட்டுள்ளன. 2026 சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. நிச்சயமாக வெற்றி பெற்று தமிழகத்தில் ஆட்சி அமைக்கும்.

- ஜெயக்குமார்



31 ஆயிரம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை தொகுப்பூதியத்தில் இயக்குபவர்கள் குறைவான ஊதியத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். பணியாளர்களுக்கு ஊதியத்தையும் உயர்த்தி வழங்கி, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்களுக்கான காலிப்பணியிடங்களை காலம் தாழ்த்தாமல் பூர்த்தி செய்ய வேண்டும்.

- ஜி.கே. வாசன்



நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி அமைப்பீர்களா? என்று கேட்கிறீர்கள். தற்போது இந்தியா கூட்டணி ஒற்றுமையுடனும் வலிமையாகவும் உள்ளது. இனிவரும் காலங்களிலும் காங்கிரஸ் கட்சி எங்கு உள்ளதோ, அந்த கூட்டணி வெற்றி பெறும். தமிழக வெற்றிக் கழகத்துடன் காங்கிரஸ் கூட்டணி அமைக்காது.

- செல்வப்பெருந்தகை

# கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது



கன்னியாகுமரி,நவ.23-

கன்னியாகுமரி கலெக்டர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஆர்.அழகுமீனா, தலைமையில் நடைபெற்றது.

நவம்பர் 2024 மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் அணைகளில் நீர்நிலை மற்றும் மழை விபரங்கள் குறித்தும் தெரிவிக்கப்பட்டது. இன்றைய சூழலில் பாரம்பரிய நெல் இரகங்களின் முக்கியத்துவம் மற்றும் தேவை குறித்து திருப்பதிசாரம் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய வேளாண் ஆராய்ச்சியாளரால் விவசாயிகளுக்கு காணொளி காட்சி மூலம் விளக்கப்பட்டது. கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பெறப்பட்ட 186 மனுக்களுக்கான பதில்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.விவசாயம் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் நீர்வளத்துறை மூலம் சானல்களில் தண்ணீர் வரத்து மற்றும் குளங்களை தூர்வாருதல், நீர்நிலைகளை பராமரித்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்ற கேள்விகளுக்கு பதில்கள் தெரிவிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

தோவாளை சானல் உடைப்பினால் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் பயிர் இழப்பீடு கணக்கிடும்போது கிராம வாரியாக கணக்கிட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தார்கள். இது தொடர்பாக துறை அலுவலர்களுடன் ஆலோசனை செய்து அரசுக்கு பரிந்துரைக்கப்படும் என கலெக்டர் தெரிவித்தார்கள்.குளங்களில் மீன் வளர்ப்பது மற்றும் கழிவுகளை கொட்டி குளங்களை மாசுபடுத்துவதை தடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். இது தொடர்பாக மாவட்டத்தில் ஏதேனும் 3 குளங்களில் நீர் மாதிரி எடுத்து தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்தால் செய்யப்படும் பரிசோதனை முடிவுகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் தெரிவித்தார்கள்.

வனவிலங்குகளால் பயிர் மற்றும் உயிர் சேதம் ஏற்படாமல் தடுக்க மாவட்ட வன அலுவலர் மூலம் தமிழக அரசிடம் கோரிக்கை வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. இரண்டு வருவாய் கோட்டங்களிலும் மாதந்தோறும் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் தொடர்பான கூட்டம் இடைவெளியின்றி தவறாமல் நடத்தப்பட வேண்டும் என கலெக்டர் தெரிவித்தார்கள். மேலும் விளைநிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதை கண்காணித்து அதனை தடுப்பது தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வு கூட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் மாவட்ட நகர்ப்புற ஊரமைப்பு மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என கலெக்டர் தெரிவித்தார்கள். முன்னதாக கலெக்டர் ஆர்.அழகுமீனா, தோட்டக்கலைத் துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் அரங்கினை பார்வையிட்டார்கள். தொடர்ந்து தோட்டக்கலைத் துறை சார்பில் ஜேக் மிஷன் (Jack Mission) திட்டத்தின் கீழ் வியட்நாம் சூப்பர் எர்லி மற்றும் டேங்சூரியா பலா வகைகளின் ஒட்டுவகை தொகுப்பினை 2 பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம், பத்மநாபபுரம் உதவி ஆட்சியர் வினய்குமார் மீனா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.எஸ்.காளீஸ்வரி, நீர்வளத்துறை செயற்பொறியாளர் அருள்சன் பிரைட், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) ஜென்கின் பிரபாகர், தோட்டக்கலை துணை இயக்குநர் ஷீலா ஜாண், கால்நடைப் பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சிவகாமி, துறை அலுவலர்கள், மாவட்டத்தின் முன்னோடி விவசாயிகள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில்

# மழை வெள்ளத்தினால் பயிர் பாதிப்பு ஏற்பட்டால் வேளாண்மை விரிவாக்க மையத்தை விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம்

## குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் கா.ப.கார்த்திகேயன் தகவல்



திருநெல்வேலி,நவ.23-

திருநெல்வேலி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், வேளாண்மை - உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளுடன் கலெக்டர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், கலந்துரையாடினார்.திருநெல்வேலி மாவட்டத்தில்சென்றஅக்டோபர் 2024 -ம் மாதத்தில் 64.73 மி.மீ மழை பெய்துள்ளது. இது வளமையான மழையளவான 166.00 மி.மீ-ஐ விட 61 சதவிகிதம் குறைவாகும். மேலும் நடப்பு நவம்பர் மாதத்தில் 20.11.2024- ம் தேதி வரை 146.25 மி.மீ மழை பெய்துள்ளது. மேலும் மேற்குத் தொடர்ச்சி மலையின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையினால் அணைகளில் போதுமான நீர் இருப்பு உள்ளது.திருநெல்வேலி மாவட்டத்தில் நடப்பாண்டு இது வரை 40400 ஹெக்டேர் பரப்பில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. நடப்பாண்டு பெய்த வளமான மழையளவு மற்றும் அணைகளில் நீர்திறப்பு ஆகியவற்றால் சென்ற ஆண்டை ஒப்பிடும் பொழுது நடப்பாண்டு 10155 ஹெக்டேர் சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது. இவற்றில் சிறுதானியங்கள் (10.6%) எண்ணெய்வித்துப்பயிர்கள் (191%), பழவகைகள் (27%) மற்றும் காய்கறிப்பயிர்கள் (28%) அதிகரித்துள்ளது.

அம்பாசமுத்திரம் பகுதியில் வடக்கு கோடை மேல் அழகியான் கால்வாயின் நீர்ப்பாசனம் பெறும் பகுதிகளில் வேளாண்மை துறையின் மூலம் பல முறை அறிவுறுத்தியும் காலநிலை தவறி நெல் பயிரிட்டதால், தற்பொழுது பெய்துவரும் வடகிழக்கு பருவ மழையினால் அறுவடை தருணத்தில் உள்ள பயிர்கள் சேதமடைந்து வருகிறது. இனிவரும் காலங்களில் வேளாண்மை துறை ஆலோசனையின்படி உரிய காலத்தில் பயிர் சாகுபடி மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது. வடகிழக்கு பருவமழை தற்போது துவங்கியுள்ளதால் மழை வெள்ளத்தினால் பயிர் பாதிப்பு ஏற்பட்டால் அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தையோ அல்லது மாவட்ட வெள்ள கட்டுப்பாட்டு அறையினையோ 0462-2572514 என்ற எண் மூலமாகவும், பயிர் காப்பீடு தொடர்பான புகார்களுக்கு 14447, 7358150560 அல்லது 9944369649 என்ற எண்ணையும் தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. விவசாயிகள் தங்கள் கால்நடை குறித்த விவரங்களை அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் பதிவு செய்து கொண்டால் மழைக்காலங்களில் பாதிப்பு நேரும்போது தாமதம் இன்றி நிவாரணம் கிடைத்திட இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆதலால் விவசாயிகள் தங்கள் கால்நடைகளை பதிவு செய்து பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நடப்பாண்டில் நவம்பர் மாதம் 16-ம் தேதி வரை கூட்டுறவுத்துறை மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் பயிர் கடனாக ரூ. 299.27 கோடி 18,342 விவசாயிகளுக்கு உழவர் கடன் அட்டை மூலம் வழங்கப்பட்டுள்ளது. கால்நடைத்துறை மூலம் 4531 விவசாயிகளுக்கு விவசாய கடன் அட்டை மூலம் ரூ.5593 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து விவசாயிகளுக்கு தங்குதடையின்றி கடன் உதவி கிடைக்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பயிர் கடன் பெறும் விவசாயிகள் தவிர்த்து மற்ற விவசாயிகளுக்கு உரங்கள் பெற ஆதார் அட்டை நகல் மட்டுமே போதுமானது ஆகும், அடங்கல் தேவையில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. பயிர் கடன் தேவைப்படும் விவசாயிகள் தங்கள் புகைப்படம், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், பயிர் சாகுபடி குறித்த கிராம நிர்வாக அலுவலர் அடங்கல், நிலத்தீர்வை ரசீது ஆகிய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தை நேரில் அணுகி உரங்களை பெற்று பயன் அடையலாம். மேலும் பயிர் சாகுபடி செய்யாமல் அடங்கலில் பதிவு செய்யப்பட மாட்டாது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மாவட்டத்தில் கார் பருவ நெல்லினை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய தற்கு ஏதுவாக 32 இடங்களில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க கலெக்டர் அவர்களால் உத்திரவிடப்பட்டு, இவற்றில் 26 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 5989.920 மெ. டன் நெல் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தற்போது இல்லாத 23 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தற்போது மூடப்பட்டு, மீதமுள்ள 3 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகள் மேற்கண்ட திட்டத்தின் கீழ் பதிவு செய்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது. வேளாண் பயிர்களான பிசான பருவ நெற்பயிருக்கு காப்பீடு செய்ய பிரீமியத் தொகையாக ஏக்கருக்கு ரூ.534/-ம், மக்காச்சோள பயிருக்கு பிரீமியத் தொகையாக ஏக்கருக்கு ரூ.330/-ம், தோட்டக்கலை பயிர்களான வாழை பயிருக்கு ஏக்கருக்கு ரூ.1440/-ம், வெண்டை பயிருக்கு ஏக்கருக்கு ரூ.314/-ம் பிரீமியத் தொகையாக அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.மேலும் பிசான பருவ நெல் பயிருக்கு பயிர் காப்பீடு செய்ய டிசம்பர் -16 கடைசி நாளாகும். மக்காச்சோள பயிருக்கு டிசம்பர் 30 பயிர் காப்பீடு செய்ய கடைசி நாளாகும். கோடை பருவ நெற்பயிர் செய்யும் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய 31.01.2025 கடைசி நாளாகும். அதிகனமழை மற்றும் எதிர்பாராத கனமழையினால் ஏற்படும் வெள்ளத்தில் பயிர் சேதமடைவது சமீபகாலமாக நடைபெறுவதால் நெல் பயிரிடும் விவசாயிகள் தாங்கள் பயிரிட்ட நெற்பயிரினை உடனடியாக பயிர்காப்பீட்டு திட்டத்தின்கீழ் பதிவு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 38 கிராம பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. பி.எம்.கிசான் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் இது வரை 41,120 பயனாளிகள் பதிவு செய்து பயன்பெற தகுதியுடையவராக உள்ளனர். இவற்றில் 37,144 பயனாளிகள் பிரதம மந்திரியின் கௌரவ உதவித் தொகை பெற்று வருகின்றனர். இவற்றில் e-KYC பதிவு செய்யப்படாமல் உள்ள 2059 பயனாளிகளுக்கு e-KYC செய்து கொடுத்திடவும், வங்கி கணக்குடன் ஆதார் எண் இணைப்பு செய்யப்படாமல் நிலுவையில் உள்ள 1650 பயனாளிகளை கண்டறிந்து வங்கி கணக்குடன் ஆதார் எண்ணை இணைத்திடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்களான விதைகள், உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 2024 -ம் மாதத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மொத்தம் 122 மனுக்கள் பெறப்பட்டது. அவற்றுள் வேளாண்மை சார்ந்த மனுக்கள் 63 எண்களும், வேளாண்மை சாராத மனுக்கள் 59 எண்களும் பெறப்பட்டு, மனுக்களுக்குரிய பதில்கள் சம்மந்தப்பட்ட துறை மூலம் விவசாயிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது என என கலெக்டர் தெரிவித்தார்கள்.

கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர் இரா.முருகன்,களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகம் துணை இயக்குநர் (அம்பாசமுத்திரம் வனக்கோட்டம்) இளையராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் மா.சுகன்யா, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின், , வேளாண்மை இணை இயக்குநர் (பொ) கிருஷ்ணகுமார் , துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் விவசாய பெருமக்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

தென்காசி மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்த பணிகள் முகாம் நடைபெறவுள்ளது: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்



தென்காசி நவ.23:

தென்காசி மாவட்டத்தில் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் 2025 - 18இல் வயது பூர்த்தியடைந்த புதிய வாக்காளர்களை சேர்க்கவும், காலம் சென்ற வாக்காளர்களை நீக்கம் செய்யவும், குடியிருப்பினை மாற்றம் செய்தவர்கள் முகவரி மாற்றம் செய்யவும், புதிய வாக்காளர் அடையாள அட்டை வேண்டுபவர்கள் விண்ணப்பிக்கவும் மாற்று திறனாளி வாக்காளர்கள் தங்களை மாற்று திறனாளி வாக்காளர் என குறியீடு செய்யவும் அனைத்து வாக்குசாவடி அமைவிடங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது என கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்தார்.

தென்காசி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2025 பணியானது 29.10.2024 முதல் நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளிலும், அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு வாக்காளர்களிடமிருந்து மனுக்கள் பெற்று வருகின்றனர். மேலும், வாக்காளர் பட்டியலுடன் ஆதார் எண் இணைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், கடந்த 16.11.2024 மற்றும் 17.11.2024 ஆகிய நாட்களில் இரு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்திட படிவம்-6 – 9573, (18-19 இளம் வாக்காளர் மனுக்கள் - 5638), பெயர் நீக்கம் செய்திட படிவம் – 7 – 361 மனுக்கள், பெயர் திருத்தம்,முகவரி மாற்றம் செய்ய படிவம்-8 மனுக்கள்6474 , ஆக மொத்தம் 16408 மனுக்கள் வரப்பெற்றுள்ளது.

மேலும், வரும் இன்றும் (நவ.23) நாளையும் (நவ.24) வாக்குச்சாவடி அமைவிடங்களில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. பொதுமக்கள் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர் விடுதலின்றி இடம் பெற்றுள்ளதா என சரி பார்க்கவும், தங்களது குடும்பத்தில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லாமல் இருப்பின் பெயரினை சேர்த்திடவும், தங்களது குடும்பத்தில் நீக்கம் செய்யப்பட வேண்டிய பெயர்களை தகுந்த ஆவணங்கள் சமர்பித்து நீக்கம் செய்திடவும், வாக்காளர்களின் பெயர், முகவரி திருத்தங்கள் மற்றும் புகைப்படங்கள் மாற்றங்கள் செய்திடவும், மேற்படி சிறப்பு முகாம் நாட்களில் முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை வாக்குச்சாவடி அமைவிடங்களில், மேற்கண்ட தினங்களில், உரிய படிவங்கள் அளித்து பலன் பெறலாம் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. வாக்குச்சாவடி அமைவிட அலுவலர்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் படிவங்கள் பெறுவதற்கும் பூர்த்தி செய்யவும் உதவி செய்வர் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

படிவம் 6 புதிய வாக்காளராக பதிவு செய்வதற்கு வாக்காளர் பட்டியலுடன் ஆதார் எண் இணைப்பதற்கு. (ஜனவரி 01, 2025 அன்று அல்லது அதற்கு முன்பே 18 வயது பூர்த்தியாகியிருந்தால்) படிவம் – 6ஏ வெளிநாடு வாழ் இந்தியர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கு. படிவம் – 6பி வாக்காளர் பட்டியலுடன் ஆதார் எண் இணைப்பதற்கு.

படிவம் 7 பெயரினை நீக்கம் செய்வதற்கு (இறப்பு / இரட்டைபதிவு) படிவம் – 8 முகவரி மாற்றம் (ஒரே தொகுதிக்குள் மற்றும் தொகுதி மாற்றத்திற்கு), வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் பிழை இருப்பின் பதிவுகளை திருத்தம் செய்வதற்கு / நகல் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை பெறுவதற்கு / மாற்றுத்திறனாளி வகைப்பாட்டினை பதிவு செய்வதற்கு

மேலும், https://voters.eci.gov.inஎன்ற இணையதளம் மூலமாகவும், Voter helpline App என்கிற மொபைல் செயலி மூலமாகவும் உரிய ஆவணங்களுடன் பொது மக்கள் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்திடலாம். வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தப்பணி குறித்து பொதுமக்கள் வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களையோ அல்லது கட்டணமில்லா தொலைபேசி எண்.1950 –ஐ தொடர்பு கொண்டு தங்களது சந்தேகம், கோரிக்கை தொடர்பான விபரங்களை தெரிந்து கொள்ளலாம் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இவ்வாய்ப்பினை பயன்படுத்தி, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்திட, நீக்கம் செய்திட, பிழை திருத்தம் செய்திட, முகவரி மாற்றம் செய்திட மற்றும் ஆதார் எண் இணைத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், இளம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் பெருமளவில் சேர்த்திடவும், ஆதார் எண்ணை வாக்காளர் பட்டியலுடன் இணைத்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது என கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.



தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ தனது பிறந்த நாளை முன்னிட்டு சென்னையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# தென்காசி மாவட்ட அளவிலான இளையோர் திருவிழா நடைபெறவுள்ளது: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

தென்காசி நவ.23:

தென்காசி மாவட்டத்தில் நேரு யுவ கேந்திரா மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் மாபெரும் மாவட்ட அளவிலான இளையோர் திருவிழா இலத்தூர் பாரத் கல்வியியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்தார்.

மத்திய இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தென்காசி மாவட்ட நேரு யுவ கேந்திரா மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இணைந்து (07.12.2024) அன்று நடத்தும் மாபெரும் மாவட்ட அளவிலான இளையோர் திருவிழா இலத்தூர் பாரத் கல்வியியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது. நேரு யுவ கேந்திரா ஆண்டுதோறும் இளைஞர்களின் ஆற்றல்மிகு திறன்களை வெளிக்கொண்டு வரும் விதமாக இளையோர் திருவிழாவை நடத்தி வருகிறது. அவ்வண்ணமே இந்த ஆண்டும் வெகு சிறப்பாக தென்காசி மாவட்டத்தில் இந்த விழாவானது நடைபெற உள்ளது. இப்போட்டிகள் மாவட்ட அளவில் தொடங்கி தேசிய அளவில் நிறைவடையும் இந்த பொன்னான வாய்ப்பை தென்காசி மாவட்ட இளைஞர்களும், மாணவ, மாணவிகளும் பயன்படுத்திக் கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகி ன்றனர்.

அறிவியல் கண்காட்சி - தனி நபர் போட்டி (முதல் பரிசு ரூ 3000 , 2ம் பரிசு ரூ 2000 , 3ம் பரிசு 1500), .அறிவியல் கண்காட்சி- குழுப் போட்டி (முதல் பரிசு ரூ.7000/- , 2ஆம் பரிசு ரூ.5000 , 3ம் பரிசு 3000), இளம் எழுத்தாளர் போட்டி – கவிதை, இளம் கலைஞர் போட்டி - ஓவியம், கைப்பேசி புகைப்பட போட்டி (வரிசை எண் 3 முதல் 5 வரை உள்ள போட்டிகளுக்கு முதல் பரிசு ரூ.2500/- , 2ஆம் பரிசு ரூ 1500/- , 3ஆம் பரிசு ரூ.1000./-) பிரகடன பேச்சுப் போட்டி (முதல் பரிசு ரூ.5000/- , 2ஆம் பரிசு ரூ.2500/- , 3ஆம் பரிசு ரூ.1500/-) கலைத்திருவிழா - குழு நடனப்போட்டி (முதல் பரிசு ரூ .7000 /- , 2ஆம் பரிசு ரூ .5000/- , 3ஆம் பரிசு ரூ.3000/-)தகுதிகள் - வயது வரம்பு 15 முதல் 29 வரை (அதாவது 01.09.2024 தேதியின் படி 15 வயது) போட்டியில் பங்கு பெறுபவர்கள்தென்காசி மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.கலைப்போட்டிகளுக்குமாவட்ட அளவில் வெற்றி பெற்றவர்கள் மாநில அளவிலான போட்டிகளுக்கு தகுதியடைவர். முன்பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே போட்டியில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்படும். மாவட்ட அளவிலான முன்பதிவிற்கு dsotksi@gmail.com என்ற இ.மெயில் முகவரியில் 05.12.2024 அன்று மாலை 5.00 மணிக்குள் முன்பதிவு செய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். போட்டி நடைபெறும் நாளன்று போட்டியாளர்கள் முன்பதிவு செய்யப்பட்ட விபரத்துடன், தங்களுடைய ஆதார், பிறப்பு சான்றிதழ், பள்ளி/கல்லூரியை சார்ந்தவர்கள் பிறந்த தேதி குறிப்பிடப்பட்ட உறுதி சான்றிதழ் (Bonafide Certificate) பள்ளி தலைமையாசிரியர்/கல்லூரி முதல்வர்களிடம் பெற்று சமர்பிக்கப்பட வேண்டும். மேலும் தகவலுக்கு மாவட்ட விளையாட்டு அலுவலகம், 163A, ரயில் நகர், கலெக்டர் அலுவலக பின்புறம், தென்காசி என்ற முகவரியில் நேரிலோ அல்லது 04633-212580 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.

# நெல்லை காங்கிரஸ் நிர்வாகி கொலை வழக்கில் மர்மம் நீடிக்கிறது: செல்வப்பெருந்தகை கருத்து

நெல்லை.நவ.23

நெல்லை காங்கிரஸ் நிர்வாகி கொலை வழக்கில் மர்மம் நீடிக்கிறது என செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

நடிகை கஸ்தூரி விவகாரத்தில் ஆதாரங்கள் இருந்ததால் அவர் உடனடியாக கைது செய்யப்பட்டதாகவும், நெல்லை காங்கிரஸ் நிர்வாகி கொலை விவகாரத்தில் தடயங்கள் கிடைக்காததால், குற்றவாளிகளை பிடிப்பது காவல்துறைக்கு சவாலாக இருப்பதாகவும் காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

நெல்லையில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது; “நடிகை கஸ்தூரியின் பேச்சு தொடர்பான ஆதாரங்கள் தெளிவாக இருந்தன. அதன் அடிப்படையில் அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு, அவர் கைது செய்யப்பட்டார். ஆனால் நெல்லை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் நிர்வாகி கே.பி. ஜெயக்குமாரின் கொலை வழக்கில், குற்றவாளிகள் யார் என்ற மர்மம் தொடர்ந்து நீடிக்கிறது.

அதற்கு போதிய சி.சி.டி.வி. ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இந்த கொலையை திட்டமிட்டு செய்திருக்கிறார்கள். நமது திறமையான காவல்துறையினர் குற்றவாளிகளை நிச்சயம் பிடிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. விசாரணையை தொடரட்டும். புலன் விசாரணையில் நாம் தலையிடுவது சரியாக இருக்காது.” என்றார்

நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது நமக்கு பெருமை
நாட்டை சுத்தமாக வைப்பது நமது கடமை

# தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் மழைநீர் தேங்காத வகையில் நடவடிக்கை : மேயர் தகவல்



தூத்துக்குடி.நவ.23.

தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் மழைநீர் தேங்காத வகையில் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மேயர் ஜெகன் பெரியசாமி தெரிவித்தார்.

தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 15 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது. இதற்கான ஆணைகளை மேயர் ஜெகன் பெரியசாமி வழங்கினார். பின்னர் அவர் கூறுகையில், தூத்துக்குடி மாநகராட்சி மேயராக பொறுப்பேற்று 3 ஆண்டுகள் ஆகிறது. கடந்த முறை வெள்ளத்தின் போது மாநகராட்சி நிர்வாகம் சிறப்பாக நடவடிக்கை மேற்கொண்டது. இந்நிலையில் சமீபத்தில் தூத்துக்குடி மாநகராட்சியில் தொடர்ந்து 10 மணி நேரம் மழை பெய்துள்ளது. இதில், கடந்த முறை மழைநீர் தேங்கிய பகுதிகளில் இந்த ஆண்டு தேங்கவில்லை. ஆனால், 16, 17, 18 ஆகிய 3 வார்டுகளில் மழைநீர் தேங்கியுள்ளது. இதற்கு அங்குள்ள காலி மனைகள் தான் காரணம். இது தொடர்பாக மனை உரிமையாளர்களுக்கு மாநகராட்சி சார்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் கழிவு நீர் கால்வாய்களில் குப்பைகள், பாலித்தின் பைகளை போடுவதால் வடிகாலில் அடைப்பு ஏற்படுகிறது. எனவே, பொது மக்கள் பாலித்தீன், குப்பைகளை கால்வாய்களில் போடுவதை தவிர்க்க வேண்டும். மழைக்காலத்தை முன்னிட்டு மாநகராட்சி முழுவதும், நோய் தடுப்பு நடவடிக்கைகளை முழுமையாக நடைபெற்று வருகிறது என்றார். நிகழ்ச்சியில் ஆணையர் மதுபாலன், துணை மேயர் ஜெனிட்டா, கிழக்கு மண்டல உதவி ஆணையர் வெங்கட்ராமன், மேயரின் நேர்முக உதவியாளர் ரமேஷ், ஜஸ்பர், ஆகியோர் உடனிருந்தனர்.

## தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் சங்கரன்கோவிலில் இன்று நடக்கிறது

### மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ அறிக்கை



சங்கரன்கோவில்.நவ.23

தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தென்காசி வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் வைத்து இன்று நவம்பர் 23ம் தேதி சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் மாவட்ட அவை தலைவர் பத்மநாதன் தலைமையில் நடைபெறுகிறது எனவும் , இக்கூட்டத்தில் மாநில,மாவட்ட,கழக நிர்வாகிகள்,தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பேரூர்,கழக செயலாளர்கள், தவறாது கலந்து கொள்ளும்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## துணை முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு கலைஞர் படிப்பகத்திற்கு நூல்கள்: மருத்துவர் அணி மாவட்ட அமைப்பாளர் வழங்கினார்



தென்காசி நவ.23:

துணை முதலமைச்சர் மற்றும் இளைஞணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு தொகுதிக்கு ஒரு கலைஞர் படிப்பகம் நூலகத்திற்க்கு சாந்தி மருத்துவமனை நிறுவனர் மற்றும் திமுக மருத்துவரணி மாவட்ட அமைப்பாளர் டாக்டர் அன்பரசன் மற்றும் டாக்டர் தமிழரசன் ஆகியோர் தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலனிடம் ரூபாய் 50,000/- மதிப்புள்ள புத்தகங்களை வழங்கினர்.

உடன் கடையம் வடக்கு ஒன்றிய செயலாளர் மகேஷ் மாயவன், கடையம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் அழகு தமிழ் சங்கர், சபிக் அலி, வீராணம் கவுன்சிலர் சேக், வழக்கறிஞர்கள் ரகுமான் சதத், காளிராஜ், மணிகண்டன், பிரேம்குமார் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தேரூர் மற்றும் புதுகிராமம் குளங்களை இணைக்கும் புதிய பாலம் கட்டுமான பணிகள்: அரசு செயலாளர் செல்வராஜ் ஆய்வு



தூத்துக்குடி.நவ.23

கன்னியாகுமரி மாவட்டம் தேரூர் மற்றும் புதுகிராமம் குளங்களை இணைக்கும் வகையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாலத்தினை நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் செல்வராஜ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தேரூர் பேரூராட்சிக்குட்பட்ட தேரூர் மற்றும் புதுகிராமம் குளங்களை இணைத்து கட்டப்பட்டுள்ள புதிய பாலத்தினை நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் டாக்டர்.செல்வராஜ், கலெக்டர் ஆர்.அழகுமீனா, முன்னிலையில் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேரூர் பேரூராட்சிக்குட்பட்ட தேரூர் மற்றும் புதுகிராம் குளங்களை இணைக்கும் பாலம் மிகவும் பழமையானதும், மிகவும் வலுவிழந்து பழுதடைந்திருந்ததால், அப்பாலத்தினை நாகர்கோவில் நெடுஞ்சாலை நபார்டு ஊரக சாலை உட்கோட்டம் - நபார்டு வங்கி நிதி உதவி (2022-2023) திட்டத்தின் கீழ் ரூ.71.70 இலட்சம் மதிப்பில் தேரூர் குளத்தையும், புதுகிராமம் குளத்தையும் இணைக்கும் வகையில் சாலையின் குறுக்கே 8.6 மீட்டம் நீளம் மற்றும் 7.5 மீட்டர் அகலத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள சிறுபாலத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.ஆய்வில் கண்காணிப்பு செயற்பொறியாளர் சராதா, நெடுஞ்சாலைத் துறை கோட்ட செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி (கன்னியாகுமரி), சண்முகநாதன் (திருநெல்வேலி), நெடுஞ்சாலை நபார்டு உதவி கோட்ட பொறியாளர் ஞான கீதா, நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர்கள் அரவிந்த் (நாகர்கோவில்), துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### சங்கரன்கோவிலில்

## நான்கு வழிச்சாலை சென்டர் மீடியனில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி



சங்கரன்கோவில். நவ.23.

சங்கரன்கோவில் கழுகுமலை சாலை தற்போது 4 வழி சாலையாக விரிவாக்கம் செய்யப்பட்டது. நான்கு வழிச்சாலையில் சென்டர் மீடியன் அமைக்கப்பட்டது இந்நிலையில் சென்டர் மீடியனில் நீர்நிலை பாதுகாப்பு அமைப்பு சார்பில் 1000வது மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தென்காசி நெடுஞ்சாலை துறை கோட்ட பொறியாளர் சுரேஷ்பாபு தலைமை வகித்தார். சங்கரன்கோவில் நெடுஞ்சாலை துறை உதவி கோட்ட பொறியாளர் உலகம்மாள், நீர் நிலை பாதுகாப்பு அறக்கட்டளை செயலாளர் கதிர்வேல் ஆறுமுகம், பொருளாளர் திவ்யா ரெங்கன், நெடுஞ்சாலை துறை உதவி பொறியாளர் அருள்வேசம், முத்து மணி முன்னிலை வகித்தனர். நீர் நிலை பாதுகாப்பு அறக்கட்டளை தலைவர் டிடிவி பிரேம்குமார் வரவேற்றார். இதில் நீர் நிலை பாதுகாப்பு அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்ட 150 மரக்கன்றுகள் நடப்பட்டது. நிகழ்ச்சியில் டாக்டர்கள் வாசுகி நல்லமுத்துசாமி, கவிதா ரவிச்சந்திர பிரகாஷ், இந்திய செஞ்சிலுவை சங்கம் திலகவதி, நீர்நிலைகள் பாதுகாப்பு அறக்கட்டளை துணை பொருளாளர் மாரியப்பன், மகளிர் அணி சாந்தி செல்வகுமார், மற்றும் தன்னார்வலர்கள், சாலை பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி விளையாட்டு வீரர்களுக்கு சீருடை, ஊக்கத்தொகை

### முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவபத்மநாதன் வழங்கினார்



**தென்காசி, நவ.23:**

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த தினத்தையொட்டி மாநில கபடி போட்டியில் பங்கேற்கும் வெங்கடேஸ்வரபுரம் பள்ளி வீரர்களுக்கு விளையாட்டு சீருடை மற்றும் கால்பந்து போட்டியில் மாவட்ட அளவில் 2ம் இடம்பெற்ற வீரர்களுக:கு ஊக்கத்தொகையினை முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவபத்மநாதன் வழங்கி பாராட்டினார்.

ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி, கடங்கநேரி ஊராட்சி, வெங்கடேஸ்வரபுரத்தில் அமைந்துள்ள கிராம கமிட்டி மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் கபடி அணியினர் 19வயதுக்குட்பட்ட பிரிவில் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர். மேலும் மாநில அளவில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான கால்பந்து போட்டியில் தென்காசி மாவட்ட அணி 2வது இடம் பெற்றது. இதில் பங்கு பெற்ற 18 வீரர்களில் 15 பேர் இப்பள்ளி மாணவ, மாணவிகள் ஆவர். இவ்வீரர், வீராங்கனைகளை பாராட்டி, ஊக்கத் தொகை மற்றும் விளையாட்டு சீருடை வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

திமுக இளைஞரணி செயலாளரும், தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலினின் 48வது பிறந்த தினத்தையொட்டி நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு பள்ளி செயலர் ஜெகநாதன் தலைமை வகித்தார். தென்காசி தெற்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் அய்யம் பெருமாள் முன்னிலை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியர் குகன் வரவேற்றார்.

முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வக்கீல் பொ.சிவபத்மநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாநில கபடி போட்டியில் பங்கேற்றவுள்ள வீரர், வீராங்கனைகளுக்கு வாழ்த்து தெரிவித்து, அவர்களுக்கு விளையாட்டு சீருடையும், முதலமைச்சர் கோப்பைக்கான கால்பந்து போட்டியில் மாவட்ட அளவில் 2ம் இடம் பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகையும் வழங்கி பாராட்டி பேசினார்.

இந்நிகழ்ச்சியில், ஆலங்குளம் யூனியன் துணை சேர்மன் செல்வக்கொடி ராஜாமணி, ஆலங்குளம் பேரூராட்சி மன்ற தலைவர் சுதா மோகன் லால், சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் காளியம்மாள் செல்வகுமார், கீழப்பாவூர் பேரூர் செயலாளர் ஜெகதீசன், முன்னாள் ஆலங்குளம் பேரூராட்சி துணைத் தலைவர் தங்க செல்வம், ஒன்றிய கவுன்சிலர்கள் முருகேஸ்வரி பாலகுமார், முத்துமாரி ரமேஷ், ,சங்கர், ஊராட்சி மன்ற தலைவர் முருகன், முன்னாள் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் மேகநாதன், மாவட்ட விவசாய அணி துணைத்தலைவர் இட்லி செல்வன், விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் தட்டா பாறை கணபதி, முன்னாள் இளைஞரணி அமைப்பாளர் ரவிச்சந்திரன், ஊராட்சி உறுப்பினரும், இளைஞரணி துணை அமைப்பாளருமான அசோக், இளைஞரணி அரவிந்த் திலக், வழக்கறிஞர் ஹரி கிருஷ்ணன், தொண்டரணி துணை அமைப்பாளர் பொன்மோகன்ராஜ், முன்னாள் மாணவரணி துணை அமைப்பாளர் சண்முகசுந்தரம் (எ) தினேஷ், சோனா மகேஷ் மாவட்ட பிரதிகள் ஸ்டீபன் சத்யராஜ், அன்பழகன் இளைஞர் அணி நவீன், ஏ.பி.என். குணா, ராஜ பாண்டியன் ,உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்ற தலைவர் அருணா பாண்டியன் ,சிவா மற்றும் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் உதவி தலைமை ஆசிரியர் அமிர்தவள்ளி நன்றி கூறினார்.

## சமூக ஒற்றுமையை சீர்குலைக்கும் விதமாக பேசியதாக கூறி, தி.க. நிர்வாகியை கைது செய்ய தேவேந்திர குல வேளாளர் சமுதாய மக்கள் கோரிக்கை



தென்காசி நவ.23

சமூக வலைதளங்களில் பரவி வரும் ஒரு காணொளியில், தமிழ்நாட்டில் பெரும்பான்மையாக வசிக்கும் தேவேந்திர குல வேளாளர் சமுதாய மக்களை, பத்திரிகை எழுத்தாளர் என்கிற போர்வையில் இருக்கும் திராவிடர் கழகத்தைச் சார்ந்த ஓவியா என்பவர், மிகவும் அறுவறுக்கதக்க வகையிலும், ஒரு சமூகத்தை அவதூறு செய்யும் நோக்கத்துடன் சமூக வலைதளங்களில் பிளவை ஏற்படுத்தி சமூக நல்லிணக்கத்தை சீர் குலைக்கும் நோக்கில் பேசியிருப்பது தமிழக மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனைக் கண்டித்தும், ஓவியாவை உடனடியாக கைது செய்து நீதிமுன் நிறுத்தும்படி கோரிக்கை வைத்தும் தமிழக அரசை வலியுறுத்தி , நூற்றுக்கும் மேற்பட்ட தேவேந்திர குல வேளாளர் சமுதாய மக்கள் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனு அளித்தனர். விரைவாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தமிழகம் முழுவதும் மாபெரும் போராட்டம் நடைபெறும் என்பதை தமிழக அரசிற்கு தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

## பொதிகை புத்தகத் திருவிழாவில் ட்ரஷர் ஐலண்ட் இன்டர்நேஷனல் பள்ளி மாணவ,மாணவிகள் பங்கேற்பு



தென்காசி நவ.23:

தென்காசி மாவட்டத்தின் மூன்றாவது பொதிகை புத்தகத் திருவிழா தென்காசி ஐசிஐ ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இப்புத்தகத் திருவிழாவில் 4 புத்தக அரங்குகளுடன் லட்சக்கணக்கான புத்தகங்கள் இடம்பெற்றன. பல்வேறு பள்ளிகளைச் சார்ந்த மாணவ மாணவிகள் கலந்து கொண்ட இப்புத்தகத் திருவிழாவில் ட்ரஷர் ஐலண்ட் இன்டர்நேஷனல் பள்ளி மாணவ மாணவிகள் பங்கேற்றனர். பங்கேற்ற மாணவ மாணவிகள் தங்களுக்குத் தேவையான பல்வேறு புத்தகங்களை வாங்கினர். மாணவர்களின் புத்தக வாசிப்பு திறனை மேம்படுத்தவும், புத்தகங்கள் வாசிப்பதற்கான ஆற்றலை தூண்டுவதற்குமான ஒரு அற்புதமான நிகழ்வாக இப்புத்தகத் திருவிழா அமைந்தது. இப்புத்தகத் திருவிழாவில் மாணாக்கர்கள் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளை ட்ரஷர் ஐலண்ட் இன்டர்நேஷனல் பள்ளி நிர்வாகம் செய்திருந்தது.

## ரோட்டரி சங்க விழா கீழப்புலியூர் பள்ளிக்கு சுழற்கோப்பை



தென்காசி நவ,23:

குற்றாலம் ரோட்டரிச் சங்க இளைஞர் விழா போட்டிகளில் இந்து மேல்நிலைப் பள்ளி சுழற்கோப்பை வென்றது. குற்றாலம் ரோட்டரிச் சங்க 69 ஆவது இளைஞர் விழாவை முன்னிட்டு மாணவர், மாணவிகளுக்கு பல்வேறு போட்டிகள் குற்றாலத்தில் நடைபெற்றன. இதில் ஓவியப் போட்டி சீனியர் கீழப்புலியூர் இந்து மேல்நிலைப்பள்ளி மாணவன் தம்பிரான் முதலிடம், கஸ்தூரி இரண்டாமிடம், செங்கோட்டை எஸ்.ஆர்.எம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி தன்ஷிகா மூன்றாமிடம். ஓவியம் ஜூனியர் இலஞ்சி ஆர்.பி மாணவி ராஜா ஸ்ரீ முதலிடம், மகா வைஷ்ணுவி இரண்டாமிடம், அனுசுயா மூன்றாமிடம். ஓவியம் சப் ஜூனியர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி புல்லுக்காட்டுவலசை சரத் முதலிடம்,சுகன் புவனேஷ் இரண்டாமிடம், சூரிய பிரதேஷ் இலஞ்சி இங்கிலீஷ் துவக்கப்பள்ளி சக்தி காயத்ரி ஆர்.சி தொடக்கப்பள்ளி தென்காசி. ரங்கோலி ஆர்.பி மேல்நிலைப்பள்ளி மீனாட்சி சுந்தரி முதலிடம், ஸ்ரீ முத்தரசி இரண்டாமிடம் காளீஸ்வரி இந்து மேல்நிலைப்பள்ளி மகிலா செயின் மேரிஸ் மூன்றாம் இடம். ஆத்திச்சூடி கல்லூரி ஜே.பி கல்வியல் கல்லூரி ஈஸ்வரி முதலிடம் மேல்நிலைப்பள்ளி மதுமிதா இந்து மேல்நிலைப்பள்ளி முதலிடம், காஞ்சனா இரண்டாம் இடம். இலத்தூர் எல் ஹைச் திவ்ய சுப கோமதி 3-ஆம் இடம் , துவக்கப்பள்ளி ஆர்.சி தொடக்கப்பள்ளி தென்காசி முதலிடம் ஆக்பியா இரண்டாவது இடம் பிரதீபா மூன்றாமிடம். கிராமிய நடனம் இராமசாமி பிள்ளை மேல்நிலைப்பள்ளி இலஞ்சி முதலிடம் தென்காசி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி குற்றாலம் டி.கே.டி பெண்கள் மேல்நிலைப்பள்ளி இரண்டாம் இடம் அரசு மேல்நிலைப்பள்ளி மேலகரம், இந்து மேல்நிலைப் பள்ளி மூன்றாம் இடம் இதில் அதிக புள்ளிகள் பெற்ற கீழப்புலியூர் இந்து மேல்நிலைப் பள்ளிக்கு சுழற் கோப்பை வழங்கப்பட்டது. பரிசளிப்பு விழாவிற்கு ரோட்டரி சங்க தலைவர் கை.முருகன் தலைமை வகித்தார். முன்னாள் சங்கரன் இறைவணக்கம் வாசித்தார். ராதாகிருஷ்ணன் நான்கு வழி சோதனை வாசித்தார். யூத் கமிட்டி சேர்மன் கணேசமூர்த்தி அறிக்கை வாசித்தார். உதவி ஆளுநர் சுரேஷ் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினர் மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் செல்வி. மதிவதனா இளைஞர் மற்றும் மகளிர் பற்றி சிறப்புரை ஆற்றினார். கான்பிரன்ஸ் கமிட்டி சேர்மன் சண்முக நடராஜ் இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

முன்னாள் ஆளுநர் ராஜ கோபாலன் முன்னிலை வகுத்தார். முன்னாள் தலைவர்கள் இராமகிருஷ்ணன், கல்யாணகுமார், ஸ்டாலின் ஜவகர், பிரகாஷ், அட்வகேட் கார்த்திக் குமார், சைரஸ் ராமசாமி சந்திரன் சங்கரநாராயணன், லிங்கராஜ், மீனாட்சி சுந்தரம், நாராயண ராஜா, டாக்டர் அஜீஸ், கண்ணன் டாக்டர் முத்தையா, ராஜகுலசேகர பாண்டியன், ஆவுடையப்பன், தலைமையாசிரியர் பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். செயலர் முருகன் நன்றி கூறினார் ராமநாதன் தொகுத்து வழங்கினார் ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் நல்லாசிரியர் கணேசமூர்த்தி தலைவர் கை முருகன் உள்ளிட்டோர் செய்தனர்.

## நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் குழந்தைகள் நலன் பாதுகாப்பு நிகழ்ச்சி



நாசரேத். நவ.23.

நாசரேத் மர்காஷிஸ் மேல் நிலைப் பள்ளியில் குழந்தைகள் நலன் பாதுகாப்பு சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் தூத்துக்குடி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நலன் சார்ந்த நிகழ்ச்சி நடைபெற்றது. தலைமையாசிரியர் குணசீலராஜ் தலைமை வகித்தார். உதவி தலைமை ஆசிரியர் சார்லஸ் திரவியம் முன்னிலை வகித்தார்.

தென் திருப் பேரை ஆரம்ப சுகாதார நிலைய பள்ளி சிறார் மருத்துவ குழு மருத்துவர் பத்ரி ஸ்ரீனிவாசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். குழந்தைகள் பாதுகாப்பின் அவசியம் குறித்தும், குழந்தைகளின் பாதுகாப்பிற்காக செயல்பட்டு வருகின்ற 24 மணி நேர அவசர சேவை எண் 1098 குறித்தும் மாணவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. அவசர சேவை அழைப்பு எண் குறித்த அறிவிப்பு பலகை பள்ளியில் நிரந்தரமாக காட்சிப்படுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில், உடையார் குளம் அரசு மருத்துவமனை செவிலியர்கள் ரேவதி, லீதியாள், பள்ளி குழந்தைகள் நல அலகு பொறுப்பாளர் அலெக்சன் கிறிஸ்டோபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேசிய மாணவர் படை அலுவலர் சுஜித் செல்வசுந்தர் நன்றி கூறினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பள்ளியின் தாளாளர் சுதாகர், இயற்பியல் ஆசிரியர் ஜெர்சோம் ஜெபராஜ், பிற ஆசிரியர்கள், ஆசிரியைகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers 11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

## திருச்செந்தூர் சிவன் கோயிலில் புகுந்த மழைநீர்



**திருச்செந்தூர் நவ.23-**

திருச்செந்தூர் பகுதியில் கடந்த 2 நாள்களாக கனமழை பெய்து வருகிறது. இந்நிலையில் நேற்று காலை பெய்த கனமழையால் நாழிக்கிணறு பேருந்து நிலையம் செல்லும் வழி, சபாபதிபுரம் தெரு சந்திப்பு, தினசரி சந்தை, ஜீவா நகர், பகத்சிங் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் மழைநீர் குளம் போல தேங்கியது.திருச்செந்தூர் சிவக்கொழுந்தீஸ்வரர் கோயிலில் மழைநீர் உள்ளே புகுந்தது. திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குச் செல்லும் வழியான சபாபதிபுரம் சந்திப்பில் தேங்கிய மழைநீரை, நகராட்சிப் பணியாளர்கள் மோட்டார் மூலம் வெளியேற்றினர். கொட்டும் மழையிலும் நனைந்தபடியே வந்த பக்தர்கள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

**NAME CHANGE**

I, PEER MOHAMED, S/o. Mohamed Ismail, Residing at Door No. 2-45, Muslim South Street, Anaikulam, V.K.Puthur, Tenkasi District, TamilNadu, shall henceforth be known as BEER MOHAMED

PEER MOHAMED

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**

வீ. சுப்பாராயலு,
தபெ. வீராச்சாமி,
களண்: 62, வடக்குதெரு,
சிதம்பரம்பட்டி,
கயத்தார் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம். மனுதார்

எதிர்

வட்டாட்சியர், கயத்தார்.
சார்பதிவாளர், கழுகுமலை. எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது தாயார் வீரம்மாள் என்பவர் கடந்த 11.05.2001. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்துமூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
வீ. சுப்பாராயலு, மனுதார்.

# 2026 சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற தீவிரமாக களப்பணியாற்ற வேண்டும்

## முன்னாள் அமைச்சர்கள் நத்தம் இரா. விசுவநாதன், செம்மலை பேச்சு



**திண்டுக்கல், நவ. 23-**

2026 சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற நிர்வாகிகள் தீவிரமாக களப் பணியாற்ற வேண்டும் என்று திண்டுக்கல்லில் நடைபெற்ற கள ஆய்வு கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் நத்தம் இரா. விசுவநாதன், செம்மலை ஆகியோர் பேசினர்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பில் கட்சி நிர்வாகிகள் ஆய்வு கூட்டம் திண்டுக்கல் மாவட்ட தலைமை கட்சி அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர்கள் நத்தம் இரா. விசுவநாதன், செம்மலை ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. அம்மா பேரவை இணை செயலாளர் ஆர்.வி.என் கண்ணன், நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தேன்மொழி சேகர், மாநில எம்.ஜி.ஆர் இளைஞர் அணி துணை செயலாளர் ரவி மனோகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் முன்னாள் அமைச்சர் நத்தம் இரா. விசுவநாதன் சிறப்புரையாற்றுகையில்,

2026-ல் அ.தி.மு.க.தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற நிர்வாகிகள் தீவிரமாக களப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கான அடிப்படை பணிகளை திறம்பட செயலாற்ற வேண்டும். 2026-ல் அ.தி.மு.க. ஆட்சியைப் பிடித்து பொதுச் செயலாளர் எடப்பாடியார் தமிழக முதல்வராக வேண்டும் என்பதே நமது இலக்கு. இன்னும் ஒன்றரை வருடங்களில் தேர்தல் வரவுள்ளது. திமுக ஆட்சியின் மீது தமிழக மக்கள் கடுமையான அதிருப்தியில் உள்ளனர். தி.மு.க. ஆட்சியின் மீது உள்ள வெறுப்பை கட்சி நிர்வாகிகள் உறுப்பினர்கள் தொண்டர்கள் ஒவ்வொரு மக்களிடமும் எடுத்துச் செல்ல வேண்டும். இந்த மக்கள் விரோத ஆட்சியை அகற்ற அரும்பாடு படவேண்டும். அ.தி.மு.க.ஆட்சியின்போது கொண்டுவரப்பட்டு செயல்படுத்தப்பட்ட சிறப்பான திட்டங்களை எடுத்துச் செல்ல வேண்டும். 2026-ல் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தே தீர வேண்டும் என்ற எண்ணத்தோடு பணிபுரிய வேண்டும் வெற்றி நமதே என்று பேசினார்.

முன்னாள் அமைச்சர் செம்மலை பேசுகையில்,

அ.தி.மு.க.வில் புதிய உறுப்பினர்களை அதிக அளவில் சேர்க்க வேண்டும். குறிப்பாக முதல் தலைமுறை வாக்காளர்களை அதிக அளவில் ஈர்க்க வேண்டும். நமது இயக்கத்தின் அருமை பெருமைகளை அவர்களிடம் தெரிவிப்பதோடு நாட்டு நலன் காக்க கழகத்தில் அவர்களை இணைக்க நாம் வழி வகுக்க வேண்டும். மக்களிடம் மிகுந்த மனமாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த தி.மு.க. ஆட்சி அகல வேண்டும். மீண்டும் 2026-ல் பொதுச் செயலாளர் எடப்பாடியார் தலைமையில் நல்லாட்சி மலர வேண்டும் என எதிர்பார்த்து உள்ளனர்.

எப்படி ஸ்ரீராமருக்கு பட்டாபிஷேகம் சூட்ட வேண்டும் என்பதற்காக லட்சுமணன் பாடுபட்டாரோ அதே போன்று நிர்வாகிகளும் பொதுச் செயலாளர் எடப்பாடியார் முதல்வராவதற்கு செயல்பட வேண்டும். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தோல்வியை தழுவும். அனைவரின் ஒத்துழைப்போடு உழைப்பு இருந்தால் வெற்றி நிச்சயம் என்று பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் விஜய பாலமுருகன், மாவட்ட பொருளாளர் கே.எஸ்.என். வேணுகோபால், கொடைக்கானல் நகர செயலாளர் எம். ஸ்ரீதர், மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர் ராஜ்மோகன், திண்டுக்கல் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகன், நிலக்கோட்டை ஒன்றிய செயலாளர் யாகப்பன், சாணார்பட்டி ஒன்றிய செயலாளர் ராமராசு, சுப்பிரமணி, அகரம் பேரூர் செயலாளர் சக்திவேல், தாடிக்கொம்பு ஒன்றிய செயலாளர் முத்தையா, ஆத்தூர் ஒன்றிய செயலாளர்கள் சின்னச்சாமி, மயில்சாமி, கொடைக்கானல் மேல்மலை ஒன்றிய செயலாளர் தாமோதரன், நிலக்கோட்டை பேரூர் செயலாளர் சேகர், வத்தலகுண்டு பேரூர் செயலாளர் பீர்முகமது, வெட்டியார் சத்திரம் ஒன்றிய செயலாளர்கள் சேம்பர் ஆரோக்கியசாமி, ஆர்.கே. சுப்பிரமணி, பழனி நகர செயலாளர் முருகானந்தம், ஒன்றிய செயலாளர்கள் மாரியப்பன் முத்துசாமி, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் அன்சாரி, மாவட்ட இளைஞரணி செயலாளர் அன்வர் தீன், மாவட்ட மாணவரணி செயலாளர் கோபி, மாவட்ட வர்த்தக அணி செயலாளர் பாலு, பொதுக்குழு உறுப்பினர் சுகன், மாவட்ட மகளிர் அணி செயலாளர் வளர்மதி, மதுரை மண்டல தகவல் தொழில்நுட்ப நிர்வாகி தினேஷ் குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் சதீஷ்குமார், இணை செயலாளர் சேம்பர் ஜெயசீலன், மின் திட்ட செயலாளர் பாலாஜி, கொடைக்கானல் நகர்மன்ற உறுப்பினர் ஜெயசுந்தரம், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெப்போலியன் உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மாற்றுத்திளனாளிகள் தினத்தையொட்டி மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டி

## விருதுநகர் கலெக்டர் ஜெயசீலன் துவக்கி வைத்தார்



**விருதுநகர், நவ. 23-**

விருதுநகர் மாவட்ட விளையாட்டு அரங்க மைதானத்தில் மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில், அனைத்து உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு, மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டியினை கலெக்டர் ஜெயசீலன், கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

தமிழகத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளி வீரர்கள் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபெற்று பதக்கங்கள் பெற்று இருக்கிறார்கள். அதனால் நீங்கள் அனைவரும் விளையாட்டிற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நாம் படிப்பிற்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அந்த அளவிற்கு விளையாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வருகின்ற டிசம்பர் -3ம் தேதி மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு, நமது மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்த இருக்கிறோம். அதில் ஒரு பகுதியாக விளையாட்டு நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கும், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கும் இது ஒரு மிக முக்கியமான வாய்ப்பு. இதனை அனைவரும் நன்றாக பங்கேற்று, உங்கள் திறனை சிறப்பாக வெளிப்படுத்தி பரிசுகளை பெறுவதற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் என மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தெரிவித்தார். இந்நிகழ்வில், உதவி ஆட்சியர் ஹி மான்சு மங்கள் மாவட்ட விளையாட்டு அலுவலர் குமார மணிமாறன், மாற்றுத்திறனாளி குழந்தைகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சிவகங்கையில் வரும் 29-ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**சிவகங்கை, நவ. 23-**

சிவகங்கை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வரும் 29-ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற வுள்ளது என்று மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வருகின்ற 29.11.2024 வெள்ளிக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணியளவில் சிவகங்கை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. மாவட்டத்தின் அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள விவசாயப் பெருமக்கள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

# நத்தம் அருகே கிணற்றுக்குள் விழுந்த பசுமாடு உயிருடன் மீட்பு



**நத்தம், நவ. 23-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே மணக்காட்டூரை சேர்ந்தவர் அழகர்சாமி(50). இவர் சொந்தமாக பசுமாடு ஒன்று வளர்த்து வருகிறார்.நேற்று வழக்கம் போல் தனது மாட்டை வழக்கம் போல் வயல் பகுதியில் மேய்ச்சலுக்காக விட்டிருந்தார்.அப்போது எதிர்பாராத விதமாக அவரது தோட்டத்தில் இருந்த 50 அடி ஆள கிணற்றுக்குள் மாடு தவறி விழுந்து விட்டது. இது குறித்து நத்தம் தீயணைப்பு துறையினருக்கு அழகர்சாமி தகவல் தெரிவித்தார்.

அதன் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த நத்தம் தீயணைப்பு நிலைய உதவி அலுவலர் அம்சராஜன் உள்ளிட்ட தீயணைப்பு வீரர்கள் அரை மணி நேர போராட்டத்திற்கு பின் கயிறு கட்டி மாட்டை உயிருடன் மீட்டனர். தொடர்ந்து மாடு உரிமையாளரிடம் ஒப்படைக்கபட்டது.

# குழந்தைகள் நல துறையில் காலி பணியிடத்திற்கு தகுதியுள்ளோர் டிச. 6-க்குள் விண்ணப்பிக்கலாம்

## விருதுநகர் கலெக்டர் ஜெயசீலன் தகவல்

**விருதுநகர், நவ. 23-**

குழந்தைகள் நலக்குழுவிற்கு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமன காலிப் பணியிடத்திற்கு தகுதி வாய்ந்த நபர்கள் டிசம்பர் 6-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என விருதுநகர் மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

2015-ம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் விதிமுறைகளின்படி விருதுநகர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் நலக்குழுவிற்கு தலைவர் (ம) உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. குழந்தைகள் நலக்குழுவிற்கு ஒரு பெண் உட்பட தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அரசால் மதிப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர் மற்றும் இப்பதவி அரசு பணி அல்ல.

குழந்தை உளவியல் அல்லது மனநல மருத்துவம் அல்லது சட்டம் அல்லது சமூகப்பணி அல்லது சமூகவியல் அல்லது மனித உடல் நலம் அல்லது கல்வி அல்லது மனித மேம்பாடு அல்லது மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்பு கல்வி ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றில் பட்டம் பெற்றும் குழந்தைகள் தொடர்பான உடல்நலம், கல்வி அல்லது குழந்தைகளுக்கான நலப்பணிகளில் குறைந்தது 7 ஆண்டுகள் முனைப்புடன் ஈடுபாடு கொண்டவாராக இருத்தல் வேண்டும்.

அல்லது, குழந்தை உளவியல் அல்லது மனநல மருத்துவம் அல்லது சட்டம் அல்லது சமூகப்பணி அல்லது சமூகவியல் அல்லது மனித உடல் நலம் அல்லது கல்வி அல்லது மனித மேம்பாடு அல்லது மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்பு கல்வி ஆகியவற்றில் ஏதேனும் பட்டம் பெற்று தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும். பத்திரிக்கையில் செய்தி வெளியிடும் நாளிலிருந்து, விண்ணப்பதாரர்கள் 35 வயதுக்கு குறையாதவராகவும் 65 வயதைப் பூர்த்தி செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்படிவத்தை விருதுநகர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது மாவட்ட அல்லது துறை சார்ந்த இணையத்தள முகவரியிலிருந்து www.virudhunagar.nic.in அல்லது https://dsdcpimms.tn.gov.in விண்ணப்பதாரர் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். தகுதிவாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு அதற்கான அமைந்த படிவத்தில் (06.12.2024 (வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணிக்குள் கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கப் பெறுமாறு விண்ணப்பிக்கலாம். மேலும் விபரங்களுக்கு, இயக்குநர், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை, எண்.300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600 010. என்ற முகவரியை தொடர்பு கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் செய்யப்படும் என மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

# செந்துறையில் ஆசிரியர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்




**நத்தம், நவ. 23-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே செந்துறையில் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஆசிரியர் படுகொலையை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

இதற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் அருள் தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் ரமணி கத்தியால் குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தும், ஆசிரியர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்க கோரியும் கோஷங்கள் எழுப்பபட்டது.

இதில் 25-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# ராமநாதபுரம் மாவட்டத்தில் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் அமைச்சர்கள் ராமச்சந்திரன், ராஜகண்ணப்பன் நேரில் ஆய்வு



**ராமநாதபுரம், நவ. 23-**

ராமநாதபுரம் மாவட்டத்தில் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் மீட்பு பணிகளை அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், ராஜகண்ணப்பன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் தொடர் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் ஆகியோர் கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின்போது ராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட தங்கப்பா நகர் பகுதியில் மழை தண்ணீர் தேங்கியுள்ளதை நகராட்சி நிர்வாகம் மூலம் வெளியேற்றப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்போது அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் கூறியதாவது:- தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிற்கிணங்க நாங்கள் ராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை தந்து தொடர் மழையால் தண்ணீர் தேங்கி பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு வருகிறோம். கடந்த 2 நாட்களில் அதிகளவு மழை பொழிந்தது. இந்நிலையில் ஒவ்வொரு நாளும் கலெக்டரையும், சட்டமன்ற உறுப்பினரையும் தொடர்பு கொண்டு அவ்வப்போது ஏற்படும் நிலவரம் குறித்து கேட்டறிந்தத்துடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களில் 13 சென்டி மீட்டர் மழை பொழிந்தது. ராமேஸ்வரம், மண்டபம், ராமநாதபுரம், பாம்பன்; உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு மழை பொழிந்தது. இதனால் ராமநாதபுரம் நகராட்சியில் மட்டும் 30 இடங்களில் பொது மக்கள் வசிப்பிடங்களில் தண்ணீர் தேங்கியதை உடனடி நடவடிக்கையால் 22 இடங்களில் உள்ள மழை நீர் அகற்றப்பட்டுள்ளது.

மேலும் 8 இடங்களில் மழை நீர் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.

அதனைத்தொடர்ந்து மண்டபம் பேரூராட்சி, மேற்குவாடி கடற்கரை பகுதியில் கடல் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட படகுகளை பார்வையிட்டார். பாம்பன் ஊராட்சி முந்தல்முனை பகுதியில் குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் சூழ்ந்திருப்பதை பார்வையிட்டதுடன், ராமேஸ்வரம் நகராட்சி ஓலைக்குடா பகுதியில் கடல் சீற்றத்தால் கடல் அரிப்பு ஏற்பட்டு சேதமடைந்த சாலையை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். தொடர் மழையால் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் மக்களை பாதுகாப்பாக முகாமில் தங்க வைத்திடும் வகையில் 5 முகாம்கள் அமைத்து அதில் 216 பேர் தங்கியுள்ளார்கள். அவர்களுக்கு தேவையான உணவு, உடை உள்ளிட்ட அத்தியாவசியப்பொருட்கள் வழங்கி வருவதுடன் தேவையான மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி பாதிக்கப்பட்ட இடங்கள் என கண்டறியப்பட்ட பகுதிகளில் 44 மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டதுடன் மேலும் தொடர்ந்து மருத்துவ முகாம்கள் தேவைக்கேற்ப நடத்தப்படும்.

அதேபோல் தொடர் மழையால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களை வேளாண்மைத்துறையின் மூலம் ஆய்வு செய்து இழப்பீடுகளுக்கான உரிய நிவாரணம் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதேபோல் வீடு இழந்தவர்களுக்கும், மற்ற பொருட்சேதங்களுக்கும் உரிய நிவாரணம் வழங்கப்படும். அதேபோல் ஓலைக்குடா பகுதியில்; சாலையோரம் கடல் அரிப்பை தடுக்க தடுப்புச்சுவர் அமைப்பதற்கான பணிகளும் மேற்கொள்ளப்படும். இவ்வாறு தெரிவித்தார். இந்த ஆய்வின் போது ராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ். மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) வீர் பிரதாப் சிங், ராமநாதபுரம் நகர் மன்றத்தலைவர் ஆர்.கே.கார்மேகம், ராமநாதபுரம் மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் வேலுச்சாமி, ராமநாதபுரம் நகர் மன்ற துணைத்தலைவர் டி.ஆர்.பிரவீன் தங்கம், ராமேஸ்வரம் நகர்மன்ற துணைத்தலைவர் தெட்சிணாமூர்த்தி, ராமநாதபுரம் நகராட்சி ஆணையர் அஜிதாபர்வின், ராமேஸ்வரம் நகராட்சி ஆணையர் கண்ணன், ராமேஸ்வரம் நகராட்சி பொறியாளர் பாண்டீஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**மதுரை ரிசர்வ் லைன் மைதானத்தில் மாவட்ட கலெக்டர் சங்கீதா, மாவட்ட அளவிலான மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

# மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள்

## தேனி கலெக்டர் ஷஜீவனா தொடங்கி வைத்தார்



**தேனி, நவ. 23-**

தேனி மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் மாற்றுத்திறனாளிக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட கலெக்டர் ஷஜீவனா நேற்று தொடங்கி வைத்தார்.

முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளுக்காக பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறது. குறிப்பாக மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அவர்களை ஊக்குவிக்கும் விதமாக ஊன்றுகோல், மோட்டார் பொருத்திய சக்கர நாற்காலி, மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனங்கள், ஸ்மார்ட் போன்கள் மற்றும் ஆவாஸ் மென்பொருள் டேப் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை (03.12.2024) முன்னிட்டு, நேற்று மாவட்ட விளையாட்டு அரங்கில் ஓட்டப்போட்டி, நின்று நீளம் தாண்டுதல், ஓடி நீளம் தாண்டுதல், குண்டு எறிதல், தட்டு எறிதல் போன்ற போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டிகளில் மனவளர்ச்சி குன்றியவர்கள், பார்வைத்திறன் குறைபாடுடையவர், செவித்திறன் குறைபாடுடையவர், கை கால் பாதிக்கப்பட்டவர் என 350-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் கலந்துகொண்டனர்.

மாவட்ட அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு டிசம்பர் 03-ம் தேதியன்று உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவில் பரிசுகள் வழங்கபடவுள்ளது. மேலும், இப்போட்டிகளில் முதல் இடம் பிடித்தவர்கள் மாநில அளவில் சென்னையில் நடைபெறவுள்ள விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்ள உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுதிறனாளிகள் நல அலுவலர் காமாட்சி, மாவட்ட விளையாட்டு அலுவலர் முருகன், சிறப்பு பள்ளி ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பெர்த் டெஸ்ட் முதல் இன்னிங்ஸ்:
# இந்திய அணி பந்துவீச்சில் ஆஸ்திரேலியா திணறல்
### முதல் நாளில் 7 விக்கெட்டுகளை இழந்தது




**பெர்த், நவ. 23-**

பெர்த் டெஸ்ட் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி பந்துவீச்சில் ஆஸ்திரேலியா திணறி வருகிறது. முதல் நாளில் 67 ரன்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்துள்ளது.

**சுற்றுப்பயணம்...**

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 'பார்டர்-கவாஸ்கர்' கோப்பைக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் உள்ள ஆப்டஸ் ஸ்டேடியத்தில் நேற்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் பும்ரா முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தார். வேகத்துக்கு சாதகமான இந்த மைதானத்தில் முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி ஆஸ்திரேலிய பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் விரைவில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

**150 ரன்களில்...**

முதல் இன்னிங்சில் 49.4 ஓவர்கள் தாக்குப்பிடித்த இந்தியா 150 ரன்களில் சுருண்டது. அதிகபட்சமாக நிதிஷ் ரெட்டி 41 ரன்கள் அடித்தார். ஆஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக ஜோஷ் ஹேசில்வுட் 4 விக்கெட்டுகளும், ஸ்டார்க், கம்மின்ஸ் மற்றும் மார்ஷ் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு இந்திய கேப்டன் பும்ரா பதிலடி கொடுத்தார். அவரது பந்துவீச்சில் தொடக்க ஆட்டக்காரர்கள் ஆன கவாஜா 8 ரன்களிலும், நாதன் மெக்ஸ்வீனி 10 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். இவர்களை தொடர்ந்து களமிறங்கிய ஸ்டீவ் சுமித்தை கோல்டன் டக் ஆக்கி வெளியேற்றினார்.

**முகமது சிராஜ்...**

அவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த ஹர்ஷித் ராணா, டிராவிஸ் ஹெட்டை கிளீன் போல்டாக்கினார். சிராஜ் தனது பங்குக்கு மிட்செல் மார்ஷ் மற்றும் லாபுசாக்னே விக்கெட்டை கைப்பற்றி அசத்தினார். இதில் மார்னஸ் 52 பந்துகளை சந்தித்து வெறும் 2 ரன்கள் மட்டுமே அடித்தது குறிப்பிடத்தக்கது. ஆஸ்திரேலிய பேட்ஸ்மேன்களில் இதுவரை யாரும் 20 ரன்களை கூட தொடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**67 ரன்களுடன்...**

முதல் நாளில் ஆஸ்திரேலியா 7 விக்கெட்டுகளை இழந்து 67 ரன்களுடன் தடுமாறி வருகிறது. அலெக்ஸ் கேரி 19 ரன்களுடனும், ஸ்டார்க் 6 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா தரப்பில் பும்ரா 4 விக்கெட்டுகளும், சிராஜ் 2 விக்கெட்டுகளும், ஹர்ஷித் ராணா 1 விக்கெட்டும் வீழ்த்தி உள்ளனர். ஆஸ்திரேலியா இன்னும் 83 ரன்கள் பின்தங்கி உள்ளது. இன்று 2-வது நாள் ஆட்டம் நடைபெற உள்ளது.

## ரிஷப் பண்ட் சாதனை

ரிஷப் பண்ட் இந்த இன்னிங்சில் அடித்த ரன்களையும் சேர்த்து டெஸ்ட் போட்டிகளில் ஆஸ்திரேலிய மண்ணில் இதுவரை 661 ரன்கள் அடித்துள்ளார். இதன் மூலம் 147 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஆஸ்திரேலிய மண்ணில் அதிக ரன்கள் அடித்த வெளிநாட்டு விக்கெட் கீப்பர் என்ற மாபெரும் சாதனையை ரிஷப் பண்ட் படைத்துள்ளார்.

## ஸ்கோர் விவரம்-முதல் இன்னிங்ஸ்

**இந்திய அணி 150/10**

1) யஷஸ்வி ஜெய்ஸ்வால் - 0.
2) கே.எல்.ராகுல் - 26.
3) தேவ்தத் படிக்கல் - 0.
4) விராட் கோலி - 5.
5) ரிஷப் பந்த் - 37.
6) துருவ் ஜூரெல் - 11.
7) வாஷிங்டன் சுந்தர் - 4.
8) நிதீஷ் ரெட்டி - 41.
9) ஹர்ஷித் ராணா - 7.
10) ஜஸ்ப்ரீத் பும்ரா - 8.
11) முகமது சிராஜ் - 0*

ஆஸி. சார்பில் ஹேசில்வுட் 4, கம்மின்ஸ்,ஸ்டார்க், மார்ஷ் தலா 2 விக்கெட்டுகளும் எடுத்தார்கள்.

**ஆஸ்திரேலியா 67/7. (முதல் நாள்)**

1) உஸ்மான் கவாஜா - 8.
2) நாதன் மெக்ஸ்வீனி - 10.
3) மார்னஸ் லபுஷேன் - 2.
4) ஸ்டீவ் ஸ்மித் - 0.
5) டிராவிஸ் ஹெட் - 11.
6) மிட்செல் மார்ஷ் - 6.
7) அலெக்ஸ் கேரி - 19*.
8) பாட் கம்மின்ஸ் - 3.
9) மிட்செல் ஸ்டார்க் - 6*

இந்தியா சார்பில் பும்ரா 4 , சிராஜ் 2, ஹர்சித் ராணா 1 விக்கெட்டும் எடுத்து அசத்தினார்கள்.

## 72 ஆண்டுகளுக்கு பிறகு புதிய வரலாறு:
# முதல் நாளில் 17 விக்கெட்டுகள் வீழ்ந்தது இதுவே முதல்முறை



**பெர்த், நவ. 23-**

இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் 72 ஆண்டுகால வரலாறு உடைக்கப்பட்டுள்ளது. டெஸ்ட் போட்டி முதல் நாளில் 17 விக்கெட்டுகள் வீழ்ந்தது இதுவே முதல் முறை.

**முதல் இன்னிங்ஸ்...**

இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரின் முதல் போட்டி பெர்த்தில் நேற்று (நவம்பர் 22) தொடங்கியது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ஜஸ்பிரித் பும்ரா பேட்டிங்கைத் தேர்வு செய்ய, இந்திய அணி முதல் இன்னிங்ஸில் விளையாடியது. ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் இந்திய அணி 150 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

**17 விக்கெட்டுகள்...**

இதனையடுத்து, முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணி இந்திய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறினர். முதல் நாள் ஆட்டநேர முடிவில் ஆஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுகளை இழந்து 67 ரன்கள் எடுத்துள்ளது. பெர்த் மைதானத்தில் முதல் நாளில் 17 விக்கெட்டுகள் வீழ்த்தப்படுவது இதுவே முதல் முறையாகும். ஆஸ்திரேலிய அணி 10 விக்கெட்டுகளையும், இந்திய அணி 7 விக்கெட்டுகளையும் இன்று (நவம்பர் 22) ஒரே நாளில் கைப்பற்றியது. இந்த 17 விக்கெட்டுகளையும் வேகப் பந்துவீச்சாளர்களே கைப்பற்றியுள்ளனர். இதற்கு முன்னதாக, பெர்த் மைதானத்தில் முதல் நாளில் அதிக விக்கெட்டுகள் 1952 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**மரம்
மனிதனின்
உரம்**

## அரசு முறை பயணத்தில்
# தலைவர்களுக்கு பரிசுப்பொருள் வழங்கிய பிரதமர் நரேந்திரமோடி

**புதுடெல்லி, நவ. 23-**

நைஜீரியா, பிரேசில், கயானா சுற்றுப்பயணத்தின் போது தலைவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி பரிசுப் பொருள்களை வழங்கினார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் பிரேசில், நைஜீரியா, கயானா ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். மேலும், 17 ஆண்டுகளுக்குப் பின்னர் நைஜீரியா சென்ற பிரதமர் என்ற சிறப்பையும் பெற்றார். சுற்றுப்பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடி இந்தியாவில் உள்ள பல்வேறு பகுதிகளில் கிடைக்கும் பல்வேறு வகையான தனித்துவமிக்க பரிசுப் பொருள்களையும் அந்நாட்டுத் தலைவர்களுக்கு வழங்குவதற்காக கொண்டு சென்றிருந்தார்.

அந்தப் பயணத்தின் போது மகாராஷ்டிரத்தில் இருந்து 8 பொருள்கள், ஜம்மு-காஷ்மீரில் இருந்து 5 பொருள்கள், ஆந்திர பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இருந்து தலா 3 பொருள்கள், ஜார்க்கண்டில் இருந்து 2 பொருள்கள் மற்றும் தமிழ்நாடு, கர்நாடகம், உத்தர பிரதேசம், பிகார், ஒடிஸா, லடாக் ஆகிய பகுதிகளில் இருந்து தலா ஒரு பொருளை பரிசுப் பொருளாகக் கொண்டு சென்றிருந்தார் பிரதமர் மோடி.

பிரதமர் நரேந்திர மோடி, மகாராஷ்டிரத்தின் பரிசுகளில் சிலோஃபர் பஞ்சாமிர்த கலசம் நைஜீரியாவின் அதிபருக்கு வழங்கினார். மகாராஷ்டிரத்தின் கோலாப்பூரில் இருந்து பாரம்பரிய கைவினைத்திறனுக்கு ஒரு அற்புதமான எடுத்துக்காட்டான வார்லி ஓவியங்கள் பிரேசில் அதிபருக்கு வழங்கப்பட்டது. கரிகாம் நாடுகளின் தலைவர்களில் புணேவிலிருந்து தயாரிக்கப்பட்ட வெள்ளி ஒட்டகத் தலையுடன் கூடிய பூ சிலை ஆஸ்திரேலியாவின் பிரதமருக்கு வழங்கப்பட்டது. பாரம்பரிய வடிவமைப்புடன் கையால் செதுக்கப்பட்ட வெள்ளி சதுரங்கப் பலகை போர்த்துகல் பிரதமருக்கு வழங்கப்பட்டது.

# ரஜினியை சந்தித்தது ஏன்? நாம் தமிழர் சீமான் விளக்கம்

**சென்னை, நவ. 23-**

நடிகர் ரஜினியுடன் நாம் தமிழர் சீமான் நேற்றஉ சந்தித்து பேசினார். அரசியல், திரைப்படம் உள்ளிட்டவை குறித்து ரஜினியுடன் விவாதித்ததாக அவர் தெரிவித்தார்.

நடிகர் ரஜினிகாந்தை நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று முன்தினம் சந்தித்தார். சென்னை போயஸ் கார்டனில் உள்ள ரஜினிகாந்தின் இல்லத்தில் அவரை சீமான் சந்தித்து பேசினார். இந்த நிலையில், சீமான் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது ரஜினியை சந்தித்தது குறித்து அவர் கூறியதாவது:-

அன்பின் காரணமாக மரியாதை நிமித்தமான ரஜினிகாந்தை சந்தித்தேன். இந்த சந்திப்பின்போது அரசியல், திரைப்படம் உள்ளிட்ட அனைத்தையும் விவாதித்தோம். அரசியல் கொடூரமான ஆட்டம். ரஜினிகாந்தின் மனநிலைக்கு இது சரி வராது. இந்த களத்தில் நேர்மையாக இருக்கறது ரொம்ப கஷ்டம். நல்ல ஆட்சி கொடுத்தா வாக்குக்கு காசு கொடுக்க வேண்டிய நிலைமை தேவையில்லை. தொடர்ச்சியா அதைத்தான் செய்றாங்க. இதைத்தான் "சிஸ்டம் தவறு" என ஆங்கிலத்தில் ரஜினிகாந்த் சொன்னார். அதை நான் தமிழில் அமைப்பு தப்பா இருக்கு, மாத்தணும்னு சொன்னேன். அதுகுறித்து தான் பேசினோம். இவ்வாறு அவர் கூறினார்.

## தொடர்ந்து 5-வது நாளாக அதிகரிப்பு:
# ரூ.58 ஆயிரத்தை நெருங்கும் ஒரு சவரன் தங்கம் விலை

**சென்னை, நவ. 21-**

சென்னையில் தொடர்ந்து 5-வது நாளாக நேற்றும் அதிகரித்துள்ளது தங்கம் விலை. வெள்ளிக்கிழமை பவுனுக்கு ரூ.640 உயர்ந்து ரூ.57,800-க்கு விற்பனையாகிறது. கடந்த 5 நாள்களில் மட்டும் பவுனுக்கு ரூ.2,320 உயர்ந்துள்ளது.

சென்னையில் தங்கத்தின் விலை வார தொடக்கம் முதலே உயர்ந்த வண்ணம் உள்ளது. நவ.18-ஆம் தேதி பவுனுக்கு ரூ.480 உயர்ந்து ரூ.55,960-க்கும், நவ.19-இல் பவுனுக்கு ரூ.560 உயர்ந்து ரூ.56,520-க்கும், நவ.20 ஆம் தேதி பவுனுக்கு ரூ.400 உயர்ந்து ரூ.56,920-க்கும், நவ.21 ஆம் தேதி பவுனுக்கு ரூ.240 உயர்ந்து ரூ.57,160-க்கும், விற்பனையானது.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமையும் பவுனுக்கு ரூ.640 உயர்ந்து ரூ. 57,800-க்கும், கிராமுக்கு ரூ. 80 உயர்ந்து ரூ. 7,225-க்கும் விற்பனையானது. கடந்த 5 நாள்களில் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.2 ஆயிரத்து 320 உயர்ந்துள்ளது. வெள்ளி விலை தொடர்ந்து 4-ஆவது நாளாக எந்தவித மாற்றமுமின்றி கிராம் ரூ.101-க்கும், கிலோ ரூ.1,01,000-க்கும் விற்பனையானது. போர் பதற்றம், தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு உள்ளிட்ட சர்வதேச காரணங்களால் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. டிசம்பர் இறுதிக்குள் பவுன் ரூ.60 ஆயிரத்தை தொடக்கூடும் என தங்க நகை வியாபாரிகள் கூறுகின்றனர்.

## ஷமி குறித்து பும்ரா பதில்

முதல் டெஸ்ட் போட்டி தொடங்குவதற்கு முன் இரு அணிகளின் கேப்டன்களும் ஒன்றாக இணைந்து பார்டர் - கவாஸ்கர் கோப்பையை அறிமுகம் செய்து வைத்தனர். அதன்பின் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டனர். அதில் முகமது ஷமி அணிக்கு திரும்புவது குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த பும்ரா, "ஷமி பாய் விளையாடத் தொடங்கியுள்ளார்.

அவர் எங்களுடைய அணியின் முக்கியமான வீரர். அவர் மீது இந்திய அணி நிர்வாகம் நெருக்கமான கண்களை வைத்திருக்கும் என்று உறுதியாக சொல்வேன். எனவே விஷயங்கள் சரியாக இருந்தால் அவர் இங்கே விளையாடுவதை உங்களால் விரைவில் பார்க்க முடியும்" என்று கூறினார். முன்னதாக காயத்திலிருந்து மீண்டு வந்த முகமது ஷமி தற்போது உள்ளூர் தொடர்களில் விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது.

## பண்ட்டிடம் லியோன் கேள்வி

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 'பார்டர்-கவாஸ்கர்' கோப்பைக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் உள்ள ஆப்டஸ் ஸ்டேடியத்தில் நேற்று தொடங்கியது.

இந்த நிலையில் இந்த போட்டியின் போது ரிஷப் பண்ட்டிடம்..டிடம் ஐபிஎல் ஏலத்தில் எந்த அணிக்கு செல்ல போகிறீர்கள் என ஆஸ்திரேலிய வீரர் நாதன் லியோன் கேள்வி எழுப்பினார் இதற்கு பதிலளித்த பண்ட் எந்த யோசனையும் இல்லை என தெரிவித்தார். இது தொடர்பான வீடியோ இணையத்தில் அதிகம் வைரலாகி வருகிறது . ஐபிஎல் ஏலம் வரும் 24,25-ம் தேதிகளில் நடைபெற உள்ளது.

## ஜஸ்ப்ரிட் பும்ராவுக்கு பாராட்டு

முதல் டெஸ்ட்டின் முதல் நாளில் அபார பந்துவீச்சை வெளிப்படுத்திய ஜஸ்பிரித் பும்ராவை, இலங்கை அணியின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளர் லாசித் மலிங்கா பாராட்டியுள்ளார். இது தொடர்பாக அவரது எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் அவர் பதிவிட்டிருப்பதாவது: ஜஸ்பிரித் "உலகின் சிறந்த வீரர்" பும்ரா எனப் பதிவிட்டுள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று பட்டாபிராமில் டைடல் பூங்காவை திறந்து வைத்து, M/s. Webberax Solutions Pvt. Ltd., M/s. Dotnix Technologies LLP ஆகிய நிறுவனங்களுக்கு அப்பூங்காவில் தள ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை வழங்கினார்.

# த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் பட்டியல் விரைவில் வெளியாகிறது

**சென்னை, நவ. 23-**

தமிழகம் முழுவதும் கட்சிக்கு புதிய நிர்வாகிகளை நியமிக்க விஜய் திட்டமிட்டு வரும் நிலையில், ஜனவரி முதல் வாரத்தில் த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் பட்டியல் வெளியாகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகரான விஜய், தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் அரசியல் கட்சியை அண்மையில் தொடங்கினார். இதையடுத்து தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் அரசியல் மாநாடு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் கடந்த மாதம் (அக்டோபர்) 27-ந்தேதி பிரமாண்டமாக நடந்தது. இந்த மாநாட்டில் லட்சக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்றனர். மாநாட்டில் விஜய்யின் பரபரப்பான பேச்சு தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது.

மாநாட்டை தொடர்ந்து 2026-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள தமிழக வெற்றிக்கழகம் தயாராகி வருகிறது. அதற்கேற்ப அரசியல் வியூகங்களை விஜய் அமைத்து வருகிறார். மற்றொரு பக்கம் தமிழக வெற்றிக்கழகத்தை அனைத்து நிலைகளிலும் பலப்படுத்தும் பணியையும் அவர் தொடங்கி உள்ளார். மேலும் தமிழகம் முழுவதும் கட்சிக்கு புதிய நிர்வாகிகளை நியமிக்க விஜய் திட்டமிட்டு வருகிறார்.

இந்த நிலையில், அடுத்த ஆண்டு ஜனவரி முதல் வாரத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்ட செயலாளர்கள் பட்டியல் வெளியாகும் என தகவல் வெளியாகியுள்ளது. த.வெ.க.வில் 100 மாவட்டங்களாக பிரித்து மாவட்ட செயலாளர்களை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக சென்னை பனையூரில் உள்ள தலைமை அலுவலகத்தில் ஒன்றிய, பகுதி,பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அணி தலைவர்களிடம் கருத்து கேட்டு செயலாளர்களை தேர்வு செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

பெரும்பாலான நிர்வாகிகள் மாவட்ட செயலாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இத்துடன் மாவட்ட அமைப்பாளர்கள், பொருளாளர்கள், பொறுப்பாளர்கள், ஒன்றிய செயலாளர்கள் தேர்வும் நடைபெற்று வருகிறது. மாவட்ட செயலாளர்கள் தேர்வு செய்யப்படுவதை கட்சி தலைவர் விஜய் இறுதி செய்ததும், பட்டியல் வெளியாகும் என கூறப்படுகிறது.

மாவட்ட, வட்ட, ஒன்றிய, கிளை வரை செயலாளர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள். தேர்தல் பணிக்காக இப்போதே ஒரு வாக்குச்சாவடிக்கு 10 பொறுப்பாளர்கள் வீதம் நியமித்து பணிகளை தொடங்கவும் விஜய் திட்டமிட்டு இருக்கிறார். நிர்வாகிகள் நியமிக்கப்பட்ட பிறகு மாவட்ட வாரியாக சுற்றுப்பயணம் செய்ய விஜய் திட்டமிட்டு உள்ளார். இதற்கான பயண விவர தயாரிப்பு பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

# மகாராஷ்டிரம், ஜார்க்கண்டில் காங்கிஸ் ஆட்சி அமைக்கும்
### மல்லிகார்ஜூன கார்கே நம்பிக்கை

**மும்பை, நவ. 23-**

மகாராஷ்டிரம், ஜார்க்கண்டில் காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சிகள் ஆட்சிக்கு வரும் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் பெங்களூருவில் செய்தியாகளுக்கு அளித்த பேட்டியில், நான் இப்போது என்ன சொன்னாலும், அது ஒரு ஊகமாக இருக்கும்.

நாங்கள் சிறப்பாக செயல்பட்டுள்ளோம். இங்கு (மகாராஷ்டிரம்) அல்லது ஜார்கண்ட் என ஒவ்வொரு மாநிலத்திலும் பல கூட்டங்களில் தனிப்பட்ட முறையில் பங்கேற்றுள்ளேன். நாங்கள் (ஆட்சிக்கு) வருவோம் என்ற நம்பிக்கை உள்ளது. பொறுத்திருந்து பார்ப்போம் என்றார்.

288 தொகுதிகளைக் கொண்ட மகாராஷ்டிரத்தில் பெரும்பான்மைக்கு 145 இடங்கள் தேவை. இங்கு ஆளும் பாஜக-சிவசேனை (ஷிண்டே), தேசியவாத காங்கிரஸ் (அஜீத் பவார்) கட்சிகளின் 'மகாயுதி' கூட்டணி ஆட்சியைத் தக்கவைக்கும், 81 தொகுதிகளைக் கொண்ட ஜார்க்கண்டில் (பெரும்பான்மை 41) ஆளும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, காங்கிரஸ், ராஷ்ட்ரீய ஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய 'இண்டி' கூட்டணியிடமிருந்து பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றும் என்று பெரும்பாலான வாக்குக் கணிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், ஒரு சில வாக்குக் கணிப்புகள் காங்கிரஸ் கூட்டணிக்கு சாதகமாக உள்ளன. இரு மாநிலங்களிலும் நவ. 23-ஆம் தேதி(சனிக்கிழமை) வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர் பெரியகருப்பன் மீதான
# தேர்தல் தகராறு வழக்கை ரத்து செய்து உயர்நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, நவ. 23-**

அமைச்சர் பெரியகருப்பன் மீதான தேர்தல் தகராறு வழக்கை ரத்து செய்து ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2016 சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தின்போது சிவகங்கை பட்டமங்கலத்தில் தி.மு.க.வினருக்கும் அ.தி.மு.க.வினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இது தொடர்பாக, திருப்பத்தூர் தொகுதி தி.மு.க. வேட்பாளரான பெரியகருப்பன் உள்ளிட்ட 8 பேர் மீது, போலீசார் வழக்கு பதிவு செய்து சிவகங்கை கோர்ட்டில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

இந்த நிலையில் தன் மீதான வழக்கை ரத்து செய்யக் கோரி அமைச்சர் பெரியகருப்பன் சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது, சம்பவம் நடந்த போது அந்த இடத்தில் அமைச்சர் பெரியகருப்பன் இல்லை என்று அவரது தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி, கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் மீதான தேர்தல் தகராறு வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார்.

## தொகுப்பூதிய முறையில் பேராசிரியர்கள் நியமனம்:
# அறிவிப்பை திரும்ப பெற்றது அண்ணா பல்கலைக் கழகம்

**சென்னை, நவ. 23-**

தொகுப்பூதிய முறையில் பேராசிரியர்கள் நியமனம் என்ற அறிவிப்பை அண்ணா பல்கலைக் கழகம் திரும்பப் பெற்றது. இனிமேல் அவுட் சோர்சிங் முறையில் மட்டுமே புதிய பணி நியமனங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அண்ணா பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அண்ணா பல்கலைக் கழக பதிவாளர் பல்கலைக் கழகத்துக்கு உட்பட்ட டீன்கள், பல்வேறு மையங்களின் இயக்குநர்களுக்கு அனுப்பியுள்ள ஒரு சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: பல்கலைக் கழக நிதிக் குழு மற்றும் சிண்டிகேட் குழு எடுத்த முடிவின்படி, புதிதாக மேற்கொள்ளப்படும் உதவி பேராசிரியர், ஆசிரியர் அல்லாத அலுவலர்கள், ஊழியர்கள் நியமனம் தினக்கூலி அல்லது தொகுப்பூதியம் அடிப்படையில் அவுட்சோர்சிங் முறையில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

ஏதேனும் திட்டங்களுக்கு பணியாளர்கள் தேவைப்பட்டால் தினக்கூலி அல்லது தொகுப்பூதியத்தில் தற்காலிக பணியாளர்களை திட்ட காலம் முடியும் வரை பணியில் அமர்த்தலாம். ஏதேனும் ஒரு துறையில் கூடுதலாக தற்காலிக பணியாளர்கள் பணியாற்றினால் அவர்களை பணியாளர் பற்றாக்குறை உள்ள வேறு துறையில் பணியமர்த்தலாம். இந்த புதிய உத்தரவு 20.1. 2024 முதல் நடைமுறைக்கு வருகிறது. இவ்வாறு அந்த சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பதிவாளரின் இந்த சுற்றறிக்கை காரணமாக, அண்ணா பல்கலைக் கழகத்தில் இனிமேல் நிரந்தர உதவி பேராசிரியர்களோ, அலுவலர்களோ, ஊழியர்களோ நியமிக்கப்பட மாட்டார்கள் என்ற சூழல் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்து பல்கலைக் கழகங்களிலும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பதவிகளில் ஏராளமான காலியிடங்கள் உள்ளன. அவற்றில் தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் ஆயிரக்கணக்கானோர் நீண்ட காலமாக பணியாற்றி வருகிறார்கள்.

அண்மையில் தேசிய கல்விக்கொள்கை-2020 தொடர்பான கருத்தரங்கில் பங்கேற்க சென்னை வந்திருந்த பல்கலைக் கழக மானியக்குழு (யு.ஜி.சி) தலைவர் எம்.ஜெகதீஷ் குமார், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் தொகுப்பூதிய முறையில் ஆசிரியர்களை நியமிக்கக் கூடாது என அறிவுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.



காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் நேற்று, குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு முழுவதும் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட குறு, சிறு, மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் தென்னிந்தியாவிலேயே முதன்முறையாக, துல்லிய உற்பத்தி பெருங்குழுமத்தால் முதற்கட்டமாக ரூ.18.18 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தை, முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். அருகில் அமைச்சர்கள் உடனிருந்தனர்.

## திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில்

# ரூ.330 கோடியில் புதிய டைடல் பூங்கா திறப்பு

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, நவ. 23-

திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் கட்டப்பட்டுள்ள புதிய டைடல் பூங்காவை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது., தமிழ்நாட்டின் வடபகுதியில் உள்ள நகரங்களுக்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை கொண்டு செல்லும் நோக்கத்துடன் திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் 11.41 ஏக்கர் பரப்பளவில், ரூ. 330 கோடி செலவில் தரை மற்றும் 21 தளங்களுடன் 5.57 லட்சம் சதுரடி பரப்பளவில் அதிநவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மாபெரும் டைடல் பூங்காவை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

இக்கட்டடத்தில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் செயல்பட தேவையான, நவீன தொலைத்தொடர்பு வசதிகள், தடையற்ற உயரழுத்த மும்முனை மின் இணைப்பு மற்றும் மின் இயக்கி வசதிகள், மின்தூக்கி வசதிகள், சுகாதார வசதி, தீ பாதுகாப்பு மற்றும் கட்டட மேலாண்மை வசதிகள், சிசிடிவி கேமரா வசதிகள், 927 கார்கள் மற்றும் 2,280 இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி, அரங்கம், 24 மணி நேர பாதுகாப்பு வசதிகள், உணவகம் மற்றும் உடற்பயிற்சி கூடம் போன்ற அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டடமானது, 6,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையிலும் பசுமை கட்டடம் வழிமுறைகளின்படியும் கட்டப்பட்டுள்ளது.

பட்டாபிராமில் இப்புதிய டைடல் பூங்கா அமைக்கப்படுவதன் மூலம் தமிழ்நாட்டின் வடபகுதியைச் சார்ந்த குறிப்பாக திருவள்ளூர் உள்ளிட்ட சுற்றுவட்டார மாவட்டங்களில் உள்ள படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறுவதுடன் அம்மாவட்டங்களின் சமூக பொருளாதார நிலையும் மேம்படும். டைடல் பூங்கா திறப்பு விழாவின்போது, பல்வேறு தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு அப்பூங்காவில் அளிக்கப்பட்டுள்ள தள ஒதுக்கீட்டுக்கான ஆணைகளை முதல்-அமைச்சர் வழங்கினார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



சென்னை அறிவாலயத்தில் நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், தி.மு.க. மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் துரைமுருகன், எம்.பி.கள் டி.ஆர்.பாலு, கனிமொழி, திருச்சி சிவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சென்னையில் இன்று அ.தி.மு.க. சார்பில் ஜானகி ராமச்சந்திரன் நூற்றாண்டு விழா

சென்னை, நவ. 23-

அ.தி.மு.க. சார்பில் முன்னாள் முதல்வர் ஜானகி ராமச்சந்திரனின் நூற்றாண்டு விழா இன்று கட்சியின் பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் சென்னை வானகரம் ஸ்ரீவாரு வெங்கடாசலபதி பேலஸ் மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் பொன்னையன் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

மேலும் இந்நிகழ்வில் முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர். ஜானகி அம்மையார், ஜெயலலிதா ஆகியோரது திருவுருவ படங்களுக்கு அ.தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

அதை தொடர்ந்து குத்து விளக்கேற்றி வைத்து நிகழ்ச்சியை அவர் தொடங்கி வைத்து விழா மலரையும் வெளியிடுகிறார்.

ஜானகி அம்மையாரின் நூற்றாண்டு விழாவை சிறப்பிக்கும் வகையில் கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம், கலை நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

முன்னாள் அமைச்சர் பா. வளர்மதி நன்றியுரை வழங்குகிறார். முன்னாள் அமைச்சர் வைகை செல்வன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.

இதில் அ.தி.மு.க.வின் அடிமட்டத் தொண்டர்களும், பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் கட்சி நிர்வாகிகளும், கலைத் துறையைச் சேர்ந்தவர்களும், பொதுமக்களும் என பலரும் கலந்து கொள்கின்றனர்.



சென்னை தேனாம்பேட்டையில் நேற்று, முதல்வரின் வாகன ஓட்டுநர் பாஸ்கரின் தந்தையும், பகுதிக்கழக மூத்த முன்னோடியுமான துரை, உடல்நலக்குறைவால் காலமானதையொட்டி, அவரது உடலுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

# தமிழகம் முழுவதும் இன்று கிராம சபை கூட்டம் நடத்த அரசு உத்தரவு

சென்னை, நவ. 23-

தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து கிராமப் புறங்களிலும் இன்று கிராம சபை கூட்டம் நடத்த வேண்டும் என மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. இதில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

உள்ளாட்சிகள் தினமான கடந்த நவம்பர் 1-ம் தேதி சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெறம் என தெரிவிக்கப்பட்டிருந்தது. அக்டோபர் 31-ம் தேதி தீபாவளி விடுமுறையை தொடர்ந்து, அடுத்த நாளும் விடுமுறை அறிவிக்கப்பட்டதால், இந்த கிராம சபை கூட்டம் தள்ளி வைக்கப்பட்டது.

இந்நிலையில், இன்று தமிழகம் முழுவதும் கிராம சபை கூட்டங்களை நடத்த ஊரக வளர்ச்சி இயக்குநர் பொன்னையா உத்தரவிட்டுள்ளார். இதையொட்டி அனைத்து ஏற்பாடுகளும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

தமிழகம் முழுவதும் இன்று 23-ம் தேதி காலை 11 மணிக்கு, கிராம சபை கூட்டத்தினை ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டுகளில் சுழற்சி முறையை பின்பற்றி நடத்த வேண்டும். இந்த கிராம சபை கூட்டத்தில், கிராம ஊராட்சிகளில் சிறப்பாக பணிபுரிந்த தூய்மை பணியாளர்களை சிறப்பிக்க வேண்டும்.

மகளிர் சுய உதவி குழுக்களை கவுரவிக்க வேண்டும். வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க வேண்டும். மேலும், தூய்மை பாரத இயக்க திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், ஜல்ஜீவன் இயக்கம், தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் மேம்பாட்டு திட்டம் ஆகியவை குறித்தும் விவாதம் நடத்தப்பட வேண்டும்.

கிராம சபை கூட்டங்கள் மதச்சார்புள்ள எந்தவொரு வளாகத்திலும் நடத்தக் கூடாது. கிராமசபை கூட்டங்கள் நடைபெறும் இடத்தை முன்கூட்டியே ஊரக பொது மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

மேலும், இன்று நடைபெறவுள்ள கிராம சபை கூட்டம், அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெற உரிய நடவடிக்கை எடுத்திடுவதுடன் கூட்ட நிகழ்வுகளை நம்ம கிராம சபை செல்போன் ஆப் மூலம் உள்ளீடு செய்திட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3 தொகுதிகளில் இன்று... (1-ம் பக்க தொடர்ச்சி)

எண்ணிக்கை இன்று 23-ம் தேதி நடை பெறுகிறது.

வயநாடு மக்களவை தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் பிரியங்கா காந்தி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் சத்யன் மொகேரி, பா.ஜ.க. சார்பில் நவ்யா ஹரிதாஸ் உள்ளிட்ட 16 பேர் போட்டி யிட்டனர். தேர்தலில் 64.69 சதவீத வாக்குகள் பதிவாகின.

கடந்த ஏப்ரல் மாதம் நடந்த மக்களவை தேர்தலில் வயநாடு தொகுதியில் போட்டியிட்ட ராகுல்காந்தி 3.64 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றார். இந்நிலையில் தற்போது நடந்த இடைத்தேர்தலில் களம் கண்ட பிரியங்கா காந்தி, அது போன்ற வெற்றியை பெறுவாரா? என்ற எதிர் பார்ப்பு நிலவுகிறது.

அதே போன்று செலக்கரா சட்டமன்ற தொகுதியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும், பாலக்காடு சட்ட மன்ற தொகுதியை காங்கிரஸ் கட்சியும் தக்க வைத்துக் கொள்ளுமா? என்பதும் இன்று தெரிந்து விடும். 3 தொகுதிகளிலும் வாக்கு எண்ணிக்கை தொடங்கிய சில மணி நேரத்திலேயே முன்னணி நிலவரம் தெரிந்து விடும்.



சென்னை கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி கூட்டரங்கில் நேற்று, பொதுப்பணிகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், சென்னை பெருநகர அலகின் சாலை மற்றும் பாலங்கள் கட்டுமான பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் நெடுஞ்சாலைகள் துறை செயலாளர் இரா.செல்வராஜ், முதன்மை இயக்குநர் ஆர்.செல்வதுரை, சிறப்பு அலுவலர் ஆர்.சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# டெல்லி பள்ளிகளில் நேரடி வகுப்பு நடத்த கோரிய மனுவை ஏற்க சுப்ரீம் கோர்ட் மறுப்பு

புதுடெல்லி, நவ. 23-

டெல்லி பள்ளிகளில் நேரடி வகுப்பு நடத்த கோரிய மனுவை ஏற்க சுப்ரீம் கோர்ட் மறுப்பு தெரிவித்துள்ளது.

டெல்லியில் ஒவ்வொரு ஆண்டும் காற்று மாசு மிகப் பெரும் பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. டெல்லியை சுற்றியுள்ள மாநிலங்களில் வேளாண் செழிப்பாக இருக்கிறது.

விவசாய ஆண்டின் இறுதியில் பயிர் கழிவுகளை எரித்து அழித்து, புதிய பயிரிடலுக்கு தயாராவார்கள். இந்த கழிவு எரிப்பு மூலம் டெல்லியில் காற்று மாசு ஏற்படுகிறது. காற்றின் தரம் 100-ஐ தாண்டினாலே அது, சுவாசிக்க ஏற்ற காற்று இல்லை.

ஆனால் டெல்லியில் மாசு 400-ஐ தாண்டியிருக்கிறது. டெல்லியில் 39 காற்று மாசு கண்காணிப்பு மையங்கள் உள்ளன. இவற்றில் 32 மையங்களில் காற்று மாசு தரக் குறியீடு 400-க்கு மேல் பதிவாகி உள்ளது.

பனிமூட்டம் போல காற்று மாசு நிலவுவதால், சாலைப்போக்குவரத்து மட்டும் இன்றி விமானப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

காற்று மாசு அதிகரித்து வருவதால் மக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக முதியவர்கள், குழந்தைகள், நோயாளிகள், கர்ப்பிணிகள், மாணவர்கள் இந்த பிரச்சினையாக கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். காற்று மாசு கட்டுக்குள் கொண்டுவர பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அவை பெரிய அளவில் கைக்கொடுக்கவில்லை.

இதனை தானாக முன் வந்து விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, டெல்லியில் பிளஸ் 2 வரை மாணவர்களுக்கு நேரடி வகுப்புகள் நடத்தக் கூடாது என்றும் ஆன்லைனில் பாடங்களை நடத்தலாம் என்றும் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், டெல்லியில் உள்ள பள்ளிகளில் நேரடி வகுப்புகளை நடத்த கோரி பெற்றோர் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுவை ஏற்க நேற்று சுப்ரீம் கோர்ட்டு மறுப்பு தெரிவித்துள்ளது. காற்று மாசு காரணமாக டெல்லி மற்றும் அதை சுற்றியுள்ள நகரங்களில் பள்ளி வகுப்புகள் ஆன்லைனில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.



சென்னை வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகள் கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற உள்ளதை முன்னிட்டு, அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நிகழ்ச்சிக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து நேரில் சென்று ஆய்வு செய்தார். அருகில் வீட்டுவசதித்துறை முதன்மைச்செயலாளர் காகர்லா உஷா உடனிருந்தார்.



சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணிகள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தில் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள், சுற்றுலா பயணத்திட்டங்கள் குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நேற்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதன்மைச்செயலாளர் சந்திரமோகன் மற்றும் ஷில்பா பிரபாகர் சதீஷ் உடனிருந்தனர்.